1728



1190 1728

PANDIAN TAMIL VACHAKAM

BOOK III

28 MAR 1940
MADRAS

BY

M. RAJAMANIKKAM

AND

M. V. RAGHAVAN

The Educational Publishing Co.
Thyagarayanagar :: MADRAS
1939.

பாண்டியன் தமிழ் வாசகம்

மூன்ரும் புத்தகம்

THE REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

ஆக்கியோர் :

வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.
தமிழாசிரியர், முத்யாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

வித்வான், ம. வி. இராகவன்
தமிழாசிரியர், இராமகிருஷ்ண மிஷன் உயர்கலாசாலை, சென்னை.

1144
494.811S6

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
தியாகராயநகர் சென்னை

பதிப்புரிமை] 1939 [விலை அணு 5

PRINTED AT
KABEER PRINTING WORKS
195, HIGH ROAD, TRIPLICANE

REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

முகவுரை

பண்டு தொட்டே தமிழகத்தை ஆண்டுவந்த சேர சோழ பாண்டியருள், தமிழைப் பேணி வளர்த்த பெருமை **பாண்டியர்க்கே உரியது.** ஆதலின், தமிழ் 'தென்றமிழ், மதுரைத் தமிழ், பாண்டித் தமிழ்' என்றெல்லாம் கூறப்படும். இப்பெற்றி நோக்கியே, இத்தமிழ்ப்பாட வரிசை **பாண்டியன் தமிழ் வாசகம்** எனப் பெயர் பெற்றது.

இந்நூற்றொகுதி, கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள **புதிய பாட இயல்** (Syllabus)படி தயாரிக்கப் பெற்றது. புதிய பாட இயலில் குறிப்பிடப்பட்டுள்ள **ஒவ்வொரு குறிப்பும்** இதன்கண் சிறப்பிடம் பெற்றுள்ளது.

கிராம மாணவன் தன்னளவில் உலக **விஷயங்களை** அறிதற்கு வேண்டும் அளவு பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல், ஆகிய தமிழ் அறிவினையும் பொது அறிவினையும் பெறச்செய்தலே இப்பாட இயலின் நன்னோக்கமாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் வரிசை தயாரிக்கப் பெற்றுளது.

பாட இயலிற் கண்டுள்ளவாறு புதிய சொற்களும் சொற்றொடர்களும் பாடந்தோறும் தரப்பெற்றுள்ளன. கதை, விஞ்ஞானம், பயிர்த்தொழில், கைத்தொழில், சுகாதாரம், சரித்திரம், உரையாடல், இலக்கியம், நாடகம் முதலிய அறிவியற் பாடங்கள் ஒவ்வொரு நூலிலும் எழுதப்பட்டுள்ளன. பாட்டுகளில் வகுப்புக்கு ஏற்றவாறு கும்மி, தாலாட்டு, அம்மானை, பந்தாட்டம், ஊசல், கண்ணி, பள்ளு, குறம் முதலிய பழம் பாடல்களும், புதிய பாடல்களும், அபிநயப் பாக்களும் ஆங்காங்கே தரப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் **கேள்விகள், பயிற்சி, இலக்கணம்** என்பவை வகுப்புக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. **மவுன வாசிப்பின்** அவசியம் படப் பயிற்சிகள்

மூலமாகவும் கதைப் பாடங்கள் முதலியவை மூலமாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. கடிதம் எழுதுதற்கும், கட்டுரை எழுதுதற்கும் தக்கவாறு சில பாடங்கள், மாதிரிக் கடிதங்கள் இன்ன பிறவும் தரப்பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், பாண்டியன் தமிழ் வாசக வரிசை—புதிய பாட இயற்படி நன்முறையில் அமைந்துள்ள **மாணவர் விருந்து** எனல் பொருந்தும். இந்நூல் வரிசை இத்தமிழகத்தே நல்வரவு கொள்ளும் எனும் துணிபுடையேம்.

மா. இராசமாணிக்கம்
ம. வி. இராகவன்

REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

ஆசிரியர்க்கு

1. **குறிப்புப் புத்தகம்**—பத்திரிகைச் செய்திகளை ஒட்டிவைத்துக் கொள்ளும் **நோட்டுப் புத்தகம்**—இவற்றின் அவசியத்தை விளக்கி, இவற்றை வைத்துக்கொண்டு பயன்பெறப் பழக்குதல் வேண்டும்.

2. பல பொருள்களை நேரிற்காணச் செய்தலின் மூலமாகக் **கட்டுரை எழுதுதற்குரிய விஷய ஞானத்தைப்** பெருக்குதல் வேண்டும்.

3. மாணவரைப் பல இடங்கட்கு அழைத்துச் செல்லல் - அவ்விடங்களைப்பற்றிய செய்திகளை விளக்கல் - அவற்றைப் பற்றிக் கட்டுரை வரையச் செய்தல்—பத்திரிகைச் செய்திகளை அன்ருடம் அறிவித்துப் பிள்ளைகட்கு உலக அறிவை ஊட்டுதல்-இன்ன பிறவும் மாணவர் முன்னேற்றத்துக்கு ஏற்றவையாம்.

4. பயிற்சிகளில் தரப்பெற்றுள்ள பலவகைச் செய்திகளைப் பற்றிய எல்லாத்துறைகளிலும் பிள்ளைகளைத் திறம்படப் பழக்குதல் வேண்டும். பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, மேலும் பல உதாரணங்கள் தந்து, பிள்ளைகளிடம் வேலை வாங்குதல் வேண்டும்.

5. தோட்ட வேலை, சிறிய கைத்தொழில்கள் இவற்றைப் பிள்ளைகளை செய்யப் பழக்குதல் நலம். பிள்ளைகள் தாம் செய்வனவற்றையும் தம் அநுபவத்தையும் குறிப்புப் புத்தகத்தில் அன்ருடம் எழுதச் செய்தல் நலமாகும்.

6. பாட நூல்களில் வரும் சம்பாஷணைகளை நாடகமாக நடிக்கச் செய்தல், நாடக ரூபத்தில் எழுதச் செய்தல், நாடக ரூபத்தில் உள்ளவற்றைக் கதை ரூபமாக எழுதச் செய்தல், கதையில் கூறப்படும் பாத்திரங்களாகத் தம்மை நினைந்து சுயசரிதை கூறுதல் போலவும், கண்டார் கூறல் போலவும், கேட்டார் கூறல் போலவும் சொல்லவும் எழுதவும் செய்தல் - முதலியன மாணவர்க்குப் பேசுந் திறனையும் எழுதுந் திறனையும் பெருக்கும் வழிகள் ஆகும்.

7. கதைப்படங்களையும் பிற பயிற்சிகளில் வரும் படங்களையும் கண்டு சில வாக்கியங்கள் கோவையாகக் கூறப் பழக்கலும், எழுதப் பழக்கலும், கதையை முழுவதும் கூறவும் எழுதவும் பழக்கலும் பிள்ளைகட்குப் பெரும்பயன் அளிக்கும்.

8. இன்ன இன்ன இடங்களில் க, ச, த, ப மிகும் என்பதைப் பிள்ளைகட்கு உதாரணத்துடன் அறிவித்து, அவ்வறிவைப் பாடங்கள் வாயிலாகப் பெருக்கிப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகளைப் பழக்குதல் ஆசிரியரது தலையாய கடனாகும்.

9. ர, ற; ல, ள; ந, ன, ண--இவற்றின் பேதம் விளங்கச் சொற்களில் இவற்றை வைத்து உச்சரிக்கப் பழக்குதல், தக்க இடங்களில் நிறுத்தக் குறிகளை அமைத்துப் பொருள் விளங்குமாறு படிக்கப் பழக்குதல், அங்ஙனமே பேசச் செய்தல் முதலியன பிள்ளைகளை மொழியறிவிற் கவலை கொள்ளச் செய்யும் நல்ல தொண்டாகும்.

10. செய்யுட்களில் சிலவற்றுக்கு நிறுத்தக் குறிகளை இட்டுள்ளோம்; சிலவற்றுக்கு இல்லை. தக்க இடங்களில் தக்க குறிகளை மாணவரைக் கொண்டு இடச்செய்தல் வேண்டும் என்பதற்கே அங்ஙனம் அவை குறியின்றி விடப்பட்டுள்ளன. செய்யுளைச் சீர்பிரித்துப் பிழையின்றி வரிவரியாக எழுதப் பழக்குதல் அவசியமாகும்.

11. அபிநயப் பாடல்கள் முதலியவற்றை அபிநயத்தோடு எடுத்தல்--நலிதல் முதலிய ஸ்வர பேதங்கள் விளங்கக் கற்பித்துப் பாடச் செய்தல் சிறந்தது.

12. உடற்பயிற்சி, சுகாதாரம் முதலிய முக்கியமான செய்திகளின் அவசியத்தைப் படங்கள், கதைகள், காட்சிகள் இவற்றின் மூலம் நன்கு அறிவுறுத்தி, அவற்றில் போதிய கவலை எடுத்துக்கொள்ளும்படி மாணவரைப் பழக்குதல் ஆசிரியர் பண்பாகும்.

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	காலையில் கிராமக் காட்சி	(படம்)	1
2.	காலையில் தெருக் காட்சி	,,	2
3.	ஊருக்கு வெளியில் சாலைக் காட்சி	,,	3
4.	திசைகள்	...	4
5.	கிராமம்	...	6
6.	தாலாட்டு	...	9
7.	உலோகங்கள்	...	11
8.	நாணயங்கள்	...	14
9.	அறிவுள்ள ஆடு	...	18
10.	கொசு	...	21
11.	வாத்து	...	23
12.	நல்ல வார்த்தை	...	26
13.	மீன்	...	27
14.	யானை	...	30
15.	காக்கையும் வடையும் (படம்)	...	33
16.	முயலும் சிங்கமும்	...	34
17.	கீழூரில் நடந்த சம்பவம்	...	38
18.	காட்சிச் சாலை	...	42
19.	யானையும் தையற்காரனும் (படம்)	...	44
20.	தோட்டம் I	...	46
21.	பழமொழிகள்	...	50
22.	தோட்டம் II	...	51
23.	புத்திமதிகள்	...	54

எண்	பொருளடக்கம்		பக்கம்
24.	கடை வீதி	...	55
25.	தினசரி வேலை	...	59
26.	எழுதும் முறை	...	61
27.	போலீஸ்காரர்	...	64
28.	தபால்காரர்	...	66
29.	கடிதங்கள்	...	68
30.	நூல் நூற்றல்	...	70
31.	நம் நாடு	...	75
32.	பாரதியார்	...	75
33.	நாடகம் (புத்திமானே பலவான்)	...	80
34.	இராட்டினப் பாட்டு	...	82
35.	செய்யுட் பகுதி	...	83

1. காலையில் கிராமக் காட்சி



இப் படத்தில் காணப்படும் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது.

2. காலையில் தெருக் காட்சி

இப் படத்தில் காணப்படும் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது.

3. ஊருக்கு வெளியில் சாலைக் காட்சி



இப் படத்தில் காணப்படும் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது.

4. திசைகள்



சொற்கள் : அறிவிப்பவன் — திசைகளை — உதிக்கும்— வலக்கை—இடக்கை—மறைகிறுன் — விழுகிறது — தோன்ருத—நீதி வாக்கியம்—இராக் காலத்தில்—துருவ நக்ஷத்திரத்தை — அறிகிருர் கள்—கோவில்—குடும்பங்கள்—குடியானவன்.

'காலையில் எழுந்து கடவுளைத் தொழு' என்பது ஒரு நீதி வாக்கியம். காலை நேரத்தை நமக்கு அறிவிப்பவன் சூரியன். நாம் சூரியனைக் கொண்டே திசைகளை அறிய வேண்டும். சூரியன் உதிக்கும் திசை கிழக்கு. சூரியன் மறையும் திசை மேற்கு. சூரியன் காலையில் உதிக்கிறுன்; மாலையில் மறைகிறுன். நீ, சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நில். உன் வலக்கைப் பக்கம் தெற்கு; இடக்கைப் பக்கம் வடக்கு. சூரியன் மறையும் திசையைப் பார்த்து நில். அப்பொழுது உனது வலக்கைப் பக்கம் வடக்கு, இடக்

கைப் பக்கம் தெற்கு. உனது நிழல் காலை நேரத்தில் மேற்கில் விழுகிறது. நாம் நிழலைக் கொண்டும் திசையை அறியலாம்.

சூரியன் தோன்றாத காலம் இரவு. நாம் இராக் காலத்தில் சந்திரனைக் கொண்டும், துருவ நக்ஷத்திரத் தைக் கொண்டும் திசையை அறியலாம். சிலர், தங்கள் ஊர்களில் உள்ள கோவில்களைக் கொண்டும் திசையை அறிகிறார்கள்.

கேள்விகள்

1. திசைகளை எவ்வாறு அறியலாம்?
2. நிழலைக்கொண்டு திசைகளை அறிவது எப்படி?
3. இரவில் திசைகளை எவ்வாறு அறிகிறார்கள்?
4. திசைகள் எத்தனை?

பயிற்சி

1. நிழல்+ஐ=நிழலை. ஊர்கள்+இல்=ஊர்களில்.

இவ்வாறே கீழ்வருவனவற்றையும் பிரித்து எழுது :--காலையில், கடவுளை, உனது, திசையை, நேரத்தில்.

2. கீழ்வரும் சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது : பார்த்தும், விழுகிறது, என்பது, அறிவிப்பவன், எழுந்தவுடன்.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமை : (1) சூரியன் —— உதிக்கிறான். (2) சூரியன் மாலையில் ——. (3) சூரியன் —— காலம் இரவு. (4) —— தோன்றாத காலம் பகல். (5) காலையில் —— —— தொழு.

4. அடியில் காணும் சொற்களுக்கு எதிர்ப் பதங்களைக் கூறு : மறையும், இரவு, காலை, விழுகிறது.

5. கிராமம்



அதிகாரி — கிராம முனிசீப்பு — கணக்கப்பிள்ளை — சுற்றிப் பார்த்து — சாகுபடிகளை — பயிர்களை — சர்க்காருக்கு — வரியை — அலுவல் — வழக்குகளை — சண்டைசச்சரவுகளை — தீர்ப்பார் — சிப்பந்திகளும் — கூடுவார்கள் — சம்பந்தமான — விஷயங்களை — ஆலோசிப்பார்கள் — நன்மைகளை.

இது ஒரு சிறு கிராமம். பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு கிராமம். கிராமத்தில் குடியானவர்களும், தச்சன், கொல்லன், வண்ணான், தட்டான் முதலிய தொழிலாளிகளும் இருக்கிறார்கள். இந்த ஊரில் ஆறு தெருக்கள் இருக்கின்றன. தோட்டங்களில் வீடு கட்டிக்கொண்டு வசிப்பவர்களும் இருக்கிறார்கள்.

ஒரு தெருவின் கோடியில் விநாயகர் கோவில் இருக்கிறது. அதைச் சுற்றிலும் ஒரு பூந்தோட்டம்

உண்டு. கோவிலுக்கு எதிரில் இருப்பது கிராமச் சாவடி. ஊருக்கு வெளியில் தென் புறமாக ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தின் கரையில் ஓர் அரச மரமும் வேப்ப மரமும் இருக்கின்றன. அவற்றைச் சுற்றிலும் கல்மேடை கட்டப்பட்டு இருக்கிறது. குளத்திற்கும் ஊருக்கும் நடுவில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது.

ஊருக்கு வடக்கே சிறிது தூரத்தில் ஒரு மைதானம் இருக்கிறது. அவ்விடத்தில் ஊரில் உள்ள கால் நடைகள் நிற்கும். அதில் ஒரு சிறிய குட்டையும் உண்டு. ஊருக்குக் கிழக்கே ஒரு சிறு குன்று இருக்கிறது. குன்றின் அருகில் ஒரு கிணறு உண்டு. அதுதான் இந்த ஊருக்குக் குடி தண்ணீர்க் கிணறு. இந்த ஊரிலிருந்து நான்கு பக்கங்களி லும் உள்ள அக்கம் பக்கம் கிராமங்களுக்குப் போகச் சாலைகள் இருக்கின்றன.

இவ்வூர் மலையை அடுத்து இருப்பதால், இதில் புன்செய் நிலங்களே அதிகம். அவற்றிற்கு 'மானம் பார்த்த பூமி' என்பது பெயர். மழை பெய்து ஏரி குளங்களுக்குத் தண்ணீர் வந்தால், விவசாயிகள் நிலத்தை உழுது பயிர் செய்ய ஆரம்பிப் பார்கள். மற்றத் தொழிலாளிகள், விவசாயிகளுக்கு வேண்டும் உதவிகளைச் செய்து பிழைக்கிறார்கள்.

கிராமத்திற்கு அதிகாரி கிராம முனிசீப்பு என்பவர். அவருக்கு உதவி செய்பவர் கணக்கப் பிள்ளை. கிராமக் கணக்குகளை எழுதுவதே கணக்கப் பிள்ளையின் வேலை. அவர் கிராம நிலங்களைச் சுற்றிப் பார்த்து, சாகுபடியான பயிர்களையும், நிலங்களையும்

பதிவு செய்வார். குடிகள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டும் வரியை வசூல் செய்வதே கிராம முனிசீப்பின் முக்கிய அலுவல். அவர் கிராமத்திற்குள் நடக்கும் சிறு வழக்குகளை விசாரிப்பார் ; சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பார். இவ்விருவர்க்கும் உதவி செய்யக் கிராமச் சிப்பந்திகளும் இருக்கிறார்கள். கிராமாதிகாரிகள் அடிக்கடி கிராமச் சாவடியில் கூடுவார்கள் ; குடிகளோடு கிராம சம்பந்தமான விஷயங்களைக் கலந்து ஆலோசிப்பார்கள் ; வேண்டும் நன்மைகளைச் செய்வார்கள்.

கேள்விகள்

1. குடும்பம் என்பது யாது ?
2. குடும்பத்திற்குத் தலைவர் யார் ?
3. கிராமங்களில் இருக்கும் தொழிலாளிகள் யாவர் ?
4. கிராமங்களில் உள்ள முக்கியமான இடங்கள் எவை ?
5. குடி தண்ணீர்க் கிணறு எந்த இடத்தில் இருக்கிறது ?
6. மைதானத்தினால் என்ன உபயோகம் ?
7. கிராம அதிகாரிகளுடைய கடமைகள் யாவை ?
8. 'மானம் பார்த்த பூமி' என்பது எதற்குப் பெயர் ?

பயிற்சி

1. சேர்த்தெழுதல்:—குன்றின் + அருகில் = குன்றினருகில். சாலைகள் + உண்டு = சாலைகளுண்டு. மைதானம் + இருக்கிறது = மைதானமிருக்கிறது.

2. அடியிற் காணும் சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமை :—குடிகள், கால்நடை, சுற்றிலும், கல்மேடை, சுற்றிப்பார்த்து.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமை :— (1) குளத்தின் கரையில் —— இருக்கின்றன. (2) குளத்திற்கும் ஊருக்கும் —— பள்ளிக்கூடம் ——. (3) —— —— சேர்ந்தது ஒரு ——.

4. எதிர்ப்பதம் கூறு :—நன்செய், வெளியே, உண்டு, கூடி.

5. (1) **தச்சன்** மரவேலை செய்கிருன். (2) **விநாயகர் கோவில்** இருக்கிறது. (3) **அரசமரம்** இருக்கிறது.

இவ்வாக்கியங்களில் **தச்சன்** என்னும் சொல் மனிதன் பெயரையும், **விநாயகர்** என்பது தேவன் பெயரையும், **கோவில்** என்பது இடத்தின் பெயரையும், **அரசமரம்** என்பது மரத்தின் பெயரையும் குறிக்கின்றன. இவை பெயரைக் குறிப்பதனுல் **பெயர்ச்சொல்** எனப்படும். **ஏதாவது ஒன்றன் பெயரைக் குறித்துவரும் சொல்லுக்குப் பெயர்ச்சொல் என்பது பெயர்.**

6. அடியில்காணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களைக் குறிக்க:—(1) சூரியன் உதிக்கிருன். (2) விவசாயிகள் பயிர் செய்வார்கள். (3) பள்ளிக்கூடம் இருக்கிறது. (4) வேப்ப மரம் நிற்கிறது.

6. தாலாட்டு



1. சோலைப் பசுங்கிளியே!
சொல்நிறைந்த பொன்னுருவே!
காலைக் கதிரொளியே!
கற்பகத்தின் பூங்கொம்பே!

2. ஈசன் உறைவிடமே!
என்னுடைய செயலுருவே!
வாச மலர்த்தேனே!
வாழ்விக்கும் மெய்த்திருவே!

3. மாடப் புறுவே!
மணிப்புறவின் பொன்குஞ்சே!
தேடத் தகுபொருளே!
தேயா முழுமதியே!

4. சிப்பியின் நல்முத்தே!
செயற்கரிய ஓவியமே!
ஒப்பில் மணிவிளக்கே!
உவட்டாத தெள்ளமிர்தே!

5. தாவும் அலைஒலியே!
தவழும் இளநிலவே!
கூவும் குயில்குரலே!
குன்றின் நதிப்பெருக்கே!

6. பாயும் மீனற்கொடியே!
பாரோர் பெருந்தனமே!
ஆயும் பொருள்சுவையே!
அன்பின் அடைக்கலமே!

7. கண்ணின் கருவிழியே!
காதல் கனிரசமே!
பண்ணின் இசைமொழியே!
பாவாய்! நீ தாலேலோ.

7. உலோகங்கள்



உலோகங்கள் — எடுக்கப்படுகின்றன — சுரங்கங்கள் — தேய் வடையும்—ஆபரணங்கள்—நயம்—தகடுகள்—கெடுதல் —நாணயங் களும்—நீட்டலாம்—அடிக்கலாம்—சேர்க்கையால்—களிம்பு—துரு— தாழ்ப்பாள்—காரீயம்—வெள்ளீயம்—பூசப்பட்ட.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவற்றிற்கு உலோகங்கள் என்பது பெயர். இவை பூமியிலிருந்து எடுக்கப்படுகின்றன. இவை வெட்டி எடுக்கும் பொழுது மண், கல் முதலியவற்ருேடு கலந்திருக்கும். பிறகு இவை அப்பொருள்களி லிருந்து பிரித்துச் சுத்தம் செய்யப்படும். அவ்வாறு உலோகங்களை வெட்டி எடுக்கும் இடங்களுக்குச் சுரங்கங்கள் என்பது பெயர்.

பொன் :—உலோகங்களில் விலை உயர்ந்தது

பொன். எல்லோரும் பொன்னை விரும்புவார்கள். இதன் நிறம் மஞ்சள். இது மிகவும் நயம் உடையது. இதை அடிக்கடி உபயோகப்படுத்தினால் தேய்வடையும். சுத்தமான பொன்னுக்குத் தங்கம் என்பது பெயர். தங்கத்தோடு சிறிது செம்பு சேர்த்தால், பொன் ஆகும். பொன்னினால் பல ஆபரணங்கள் செய்யப்படுகின்றன.

வெள்ளி:—வெள்ளி, பொன்னைவிட விலையில் குறைந்தது. சாதாரண ஜனங்கள் வெள்ளியை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். இதற்கும் நயம் உண்டு. இது வெண்மை நிறம் உடையது. வெள்ளியால் நகைகளும் பாத்திரங்களும் நாணயங்களும் செய்யலாம்.

செம்பு:—செம்பின் நிறம் சிவப்பு. இதைக் கம்பிகளாக நீட்டலாம், தகடுகளாக அடிக்கலாம். செம்பினால் பாத்திரங்கள் செய்யலாம். செம்பிற்குக் களிம்பு உண்டு. அதில் புளிப்புள்ள பொருள்கள் பட்டால் உடனே களிம்பு உண்டாகும். களிம்பு தேகத்திற்குக் கெடுதலை உண்டாக்கும்.

இரும்பு:—இரும்பு வெண்மை நிறம் உள்ள உலோகம். காற்று, தண்ணீர் இவற்றின் சேர்க்கையால் இரும்பில் துரு ஏறுகிறது. அப்போது அது கறுப்பாய்த் தோன்றும். அதனால் இரும்பின் நிறமே 'கருமை' என்று சிலர் சொல்வது உண்டு. இரும்பே ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் அதிகமாக உபயோகப்படுவது. இரும்பினால் செய்யப்பட்ட சாமான்கள் இல்லாத வீடே இல்லை. இஃது அதிகமாக உபயோகப்படுவதால் 'கரும் பொன்' என்று

சொல்லப்படும். இரும்புச் சட்டி, கரண்டி, கத்தி, ஆணி, பூட்டு, தாழ்ப்பாள் முதலியவை இரும்பினல் செய்யப்படும்.

ஈயம் :— இது காரீயம், வெள்ளீயம் என இரு வகைப்படும். வெள்ளீயமே சுத்தமானது. இது தான் பாத்திரங்களில் பூசப்படுவது. ஈயம் பூசப் பட்ட பாத்திரங்களில் களிம்பு ஏருது. இதை மற்ற உலோகங்களோடு சேர்த்துக் கலப்பு உலோகங்கள் செய்யலாம். ஈயத்தினல் செய்த பாத்திரங்கள் சமை யல் செய்ய உதவும்.

கேள்விகள்

1. உலோகங்கள் எத்தனை வகைப்படும்?
2. விலை உயர்ந்த உலோகம் எது?
3. இரும்பிற்கு வேருெரு பெயர் என்ன?
4. பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவது ஏன்?

பயிற்சி

1. சேர்த்தெழுது :—பொருள்களில்+இருந்து, நயம்+உண்டு, கார்+ஈயம், வெள்+ஈயம்.

2, அடியிற் காணும் சொற்களை வாக்கியங்களில் அமை :—அடிக் கடி, நாணயம், விலை, தாழ்ப்பாள்.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமை :—(1)—நிறம் சிவப்பு. (2) பொன்——உலோகம். (3) களிம்பு தேகத் திற்குக்—உண்டாக்கும். (4) இதைக் கம்பிகளாக——.

4. கீழே தரப்பட்டுள்ள வார்த்தைகளை அமைத்துப் பொன்னைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது :—

சுரங்கத்திலிருந்து, உலோகம், உயர்ந்தது, விரும்புவார்கள், ஆபரணங்கள்.

5. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, களிம்பு—இவற்றில் பொருத்தமானதைக் கோடிட்ட இடத்தில் அமை :—

(i) ———களிம்பு உடையது.

(ii) உலோகங்களில் விலை உயர்ந்தது——.

(iii) ———தேகத்திற்குக் கெடுதலை உண்டாக்கும்.

(iv) ——வெண்மை நிறம் உடையது.

(v) ——பொன்னைவிட விலையில் குறைந்தது.

6. (1) கோவில் இருக்கிறது. (2) ஜனங்கள் உபயோகப்படுத்து கிருர்கள்.

இவ்வாக்கியங்களில் **கோவில்** என்பது பெயர்ச்சொல். அஃது ஒரு பொருளைக் குறிக்கிறது. ஜனங்கள் என்பதும் பெயர்ச்சொல். ஆனால் அஃது ஒன்றுக்கு மேற்பட்ட பலரைக் குறிக்கிறது. இவ்வாறு சொற்கள் '**ஒரு பொருளைக்** குறிக்கும் சொல், ஒன்றுக்கு மேற்பட்ட **பல பொருள்களைக்** குறிக்கும் சொல்' என இருவகைப்படும். அவற்றில் ஒரு பொருளைக் குறிக்கும் சொல், **ஒருமை எண்** எனவும், ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிக்கும் சொல் **பன்மை எண்** எனவும் சொல்லப்படும்.

ஒருமை	**பன்மை**
வீடு	வீடுகள்
குடும்பம்	குடும்பங்கள்
தொழிலாளி	தொழிலாளிகள்
மரம்	மரங்கள்

7. அடியிற் காணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களைக் குறித்து, ஒருமையும் பன்மையும் கூறுக:—(1) கம்பிகளாக நீட்டலாம். (2) வெள்ளி பொன்னைவிட விலையில் குறைந்தது. (3) குன்று இருக்கிறது.

8. நாணயங்கள்

பெரும்பாலும்—வட்ட வடிவமானவை—வெட்டி யெடுப்பார்கள்—வளைவுகள் —விளிம்பில் —பதிக்கப்பட்டு—மற்ருெரு — சதுரமாய்—ஒவ்வொன்றின்—அரைக்கால்—முக்கால்—நிக்கல்—பட்டம்—கால் துட்டு.

பைசா, கால் அணு, அரை அணு, ஓர் அணு, இரண்டு அணு, நான்கு அணு, எட்டு அணு, ஒரு ரூபாய் என்பவை நம் தேசத்தில் வழங்கும் நாணயங்கள். இவற்றுக்கு இந்திய நாணயங்கள்

என்பது பெயர். இவை செம்பு, நிக்கல், வெள்ளி என்னும் மூன்று வகை உலோகங்களால் செய்யப் படுகின்றன. பைசா, கால் அணா, அரை அணா, இம் மூன்றும் செம்பினால் ஆனவை. ஓர் அணா, இரண்டு அணா, நான்கு அணா இவை மூன்றும் நிக்கலினால் ஆனவை. நான்கு அணா, எட்டு அணா, ஒரு ரூபாய் இவை நான்கும் வெள்ளியினால் ஆனவை.

நாணயங்கள் பெரும்பாலும் வட்ட வடிவம் ஆனவை. நிக்கலினால் செய்யப்பட்ட இரண்டு அணா நாணயம் ஒன்றே சதுரமாய் இருக்கிறது. நிக்கலி னால் செய்யப்பட்ட ஓர் அணா, நான்கு அணா நாண யங்கள் வட்டமானவை. ஆனால் அவற்றில் வளைவு கள் இருக்கும்.

நாணயங்களில் இரண்டு பக்கங்கள் உள் ளன. அவற்றில் ஒரு பக்கத்தில் நம்மை ஆளும் அரசரது உருவம் பதிக்கப்பட்டு இருக்கிறது. அதைச் சுற்றிலும் அவர் பெயரும் பட்டமும் பதிக் பட்டு உள்ளன. அவற்றின் மற்றொரு பக்கத்தில் நாணயத்தின் மதிப்பும் அதை அடித்த வருஷமும் குறிக்கப்பட்டு இருக்கின்றன.

இனி, அவை ஒவ்வொன்றின் மதிப் பையும் கவனிப்போம். இது ஒரு பைசா. இது தம்பிடி என்றும், கால் துட்டு என்றும் சொல்லப்படும்.

இது கால் அணா. சில இடங்களில் இது ‘முக்கால் துட்டு’ எனப்படும். இதன் மதிப்பு மூன்று தம்பிடிகள். சென்னையில் இது ‘பைசா’ எனப்படும்.

இஃது ஓர் அணா. இதன் மதிப்பு இரண்டு அரை அணா, நான்கு கால் அணா, அல்லது பன்னிரண்டு பைசாக்கள். இது 'வீசம் ரூபாய்' என்றும் சொல்லப் படும்.

இஃது இரண்டு அணா நாணயம். இது சதுரமாக இருப்பதைக் கவனியுங்கள். இது நிக்கலால் செய்யப்பட்டது. இது 'அரைக்கால் ரூபாய்' என்றும் சொல்லப்படும்.

இது நான்கு அணா. வட்டமாய் இருப்பது வெள்ளியால் செய்யப்பட்டது. விளிம்பில் வளைவுகளைக் கொண்டது நிக்கல் நாணயம். இது 'கால் ரூபாய்' எனப்படும். இதன் மதிப்பு நான்கு அணாக்கள் அல்லது இரண்டு இரண்டு அணாக்கள் ஆகும்.

இஃது எட்டு அணா. இஃது அரை ரூபாய் எனப்படும். இதன் மதிப்பு எட்டு ஓர் அணாக்கள்; நான்கு இரண்டு அணாக்கள் ; இரண்டு கால் ரூபாய்கள் ஆகும்.

இஃது ஒரு ரூபாய். ஒரு ரூபாய்க்கு இரண்டு எட்டு அணாக்கள், நான்கு நான்கு அணாக்கள், எட்டு இரண்டு அணாக்கள் அல்லது பதினாறு ஓர் அணாக்கள்.

கேள்விகள்

1. ஒரு ரூபாய் கொடுத்து இனம் மாற்றும் போது ஓர் அரை ரூபாயும் இரண்டு அரைக்கால் ரூபாய்களும் வாங்கிக்கொண்டால், பாக்கி எத்தனைக் காலணுக்கள் பெற்றுக் கொள்வாய்?

2. ஓர் அரை ரூபாய் நாணயத்திற்குச் சில்லரை நாணயங்கள் வேண்டும்; ஓர் இரண்டணு நாணயமும் இரண்டு ஓர் அணு நாணயங்களும் பெற்றுக்கொண்ட பின், மீதியை எத்தனைக் காலணுக்களாகப் பெறுவாய்?

3. இரண்டணு நாணயத்தை எடுத்துக்கொண்டு கடைக்குப் போய் ஒன்றே காலணுவுக்குப் பழம் வாங்கின பின், பாக்கியை எத்தனைத் தம்பிடிகளாகப் பெறுவாய்?

4. உன்னிடம் அரையணு இருக்கிறது. பிச்சைக்காரனுக்கு ஒரு தம்பிடி கொடுத்தால் பாக்கி உன்னிடம் எத்தனைத் தம்பிடிகள் இருக்கும்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைக்க:—(1) ஒரு ரூபாய்க்கு இரண்டு ——. (2) அரை ரூபாய்க்கு —— அணுக்கள். (3) —— பதினாறு காலணுக்கள்.

2. சேர்த்தெழுதல்:—வெட்டி + எடுப்பார்கள் = வெட்டியெடுப்பார்கள். விலை + அதிகம் = விலையதிகம். அரை + அணு = அரையணு.

3. சேர்த்தெழுதுக:—கால் + அணு, இதை + எடு, மணி + அடி.

4. முதல் வரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒருமைப் பெயர்ச் சொற்களுக்குப் பன்மைப் பெயர்ச் சொற்களும், இரண்டாம் வரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும் பன்மைப் பெயர்ச் சொற்களுக்கு ஒருமைப் பெயர்ச் சொற்களும் கூறுக.

அணு	பிள்ளைகள்
தம்பிடி	பிராணிகள்
ரூபா	நாய்கள்
நாணயம்	மனிதர்கள்

9. அறிவுள்ள ஆடு



மிருகம் — கொம்புகள் — நீண்டும்—துள்ளிக் குதித்து — தப்பி யோட — முயன்றது — தொடங்கியது — பின் தொடர்ந்தான் — வாய்க்கால்—கற்பாறை—ஒன்றன்பின் ஒன்றுய்.

ஆடு ஒரு மிருகம். ஆட்டில் பல வகைகள் இருக்கின்றன. அந்த வகைகளில் வெள்ளாடும் ஒன்று. வெள்ளாட்டைப் போன்ற ஒரு வகை ஆடு கள் மலைகளில் வசிக்கும். அவற்றுக்குக் கொம்பு கள் நீண்டும், நுனியில் சிறிது வளைந்தும் இருக்கும். அவை மலைகளில் உள்ள கற்பாறைகளின் மேல் தவறி விழாமல் மிகவும் வேகமாய்க் குதித்து ஓடும்.

அந்த ஆட்டைப் பிடிப்பது மிகவும் கஷ் டம். அதைப் பிடிக்கப் பல மனிதர்கள் போவார் கள். அவர்கள் மலையிலேயே சில நாட்கள் தங்கியும் இருப்பார்கள்.

அந்த வகையைச் சேர்ந்த ஆடு ஒன்று, ஒரு மலையில் வசித்து வந்தது. அது மிகவும் அறிவுள்ளது. ஒரு நாள் வேடன் ஒருவன் அந்த மலைமேல் ஏறினான்; நெடுந் தூரம் சுற்றிப் பார்த்தான். கடைசியாக அவன் அந்த ஆட்டையும் இரண்டு குட்டிகளையும் கண்டான். இரண்டு குட்டிகளும் தாய் ஆட்டின் பக்கத்தில் துள்ளிக் குதித்து விளையாடிக்கொண்டு இருந்தன. வேடன் அக்குட்டிகளில் ஒன்றையாவது பிடித்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினான். அவன் அவற்றின் அருகில் போனான். தாய் ஆடு வேடனைப் பார்த்துவிட்டது. அது, குட்டிகளோடு தானும் தப்பி ஓட முயன்றது. உடனே அந்த ஆடு குட்டிகளுடன் ஓடத் தொடங்கிற்று. வேடனும் பின் தொடர்ந்தான்.

ஆடுகளுக்குச் சிறிது தூரத்தில் ஒரு சிறு வாய்க்கால் இருந்தது. அவ்வாய்க்காலின் இரு புறமும் இரு கற்பாறைகள் நெருங்கி இருந்தன. ஆடுகள் வாய்க்காலை நெருங்கின. "பாறைகளுக்கு நடுவில் உள்ள வாய்க்காலைக் குட்டிகள் தாண்டுவது கஷ்டம். அவை தாண்டும் போது தவறிப் பள்ளத்தில் விழுந்துவிடும். அப்பொழுது அவற்றைச் சுலபமாகப் பிடித்துக்கொள்ளலாம்" என்று வேடன் நினைத்தான்.

தாய் ஆடு அறிவுள்ளது. அது தன் குட்டிகளை வாய்க்காலில் விழுந்துவிடும்படி விட்டுவிடுமா? தாய் ஆடு தன்னுடைய முன் கால்களை முன் பக்கத்துப் பாறை மீதும், பின் கால்களைப் பின் பக்கத்துப் பாறை மீதும் வைத்துக்கொண்டு நின்றது. உடனே

குட்டிகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தாயின் முது கின்மீது ஏறி, வாய்க்காலேக் கடந்தன. தாய் ஆடும் தாண்டிப் போய்க் குட்டிகளேச் சேர்த்துக் கொண்டு ஓடிவிட்டது. இதைப் பார்த்துக்கொண்டு இருந்த வேடன் மிகவும் ஆச்சரியம் அடைந்தான்.

கேள்விகள்

1. வேடனேக் கண்டதும் ஆடு என்ன செய்தது?
2. ஆடு தன் குட்டிகளே எவ்வாறு காத்தது?
3. ஆடு அறிவுள்ளது என்பதை நீ எதனல் அறிகிருய்?

பயிற்சி

1. அறிவுள்ளது—தொடர்ந்தான்—வாய்க்கால்—கடந்தன.—இவற்றுள் தக்க சொற்களேக் கோடிட்ட இடங்களில் அமைக்க:—(1) அந்த ஆடு மிகவும்——. (2) சிறிது தூரத்தில் ஒரு——இருந்தது. (3) குட்டிகள் வாய்க்காலே——. (4) வேடனும்——.

2. (i) இப் பாடத்தில் எத்தனேப் பாராக்கள் இருக்கின்றன?

(ii) முதல் பாராவில் உள்ள வாக்கியங்களே எண்ணிச் சொல்.

(iii) அதில் உள்ள ஒருமைச் சொற்களேயும் பன்மைச் சொற்களேயும் தனித்தனி எழுது.

3. நீண்டும், வளேந்தும், தவறி விழாமல், வேகமாய், கஷ்டம்—இவ்வார்த்தைகளே அமைத்து, மலே ஆட்டைப் பற்றி 5 வாக்கியங்கள் எழுது.

4. (1) வேடன் **கண்டான்**. (2) தொழிலாளிகள் **வசிக்கிருர்கள்**. (3) ஆடு **வசிக்கும்**. (4) ஆறு **ஓடுகிறது**. (5) பாறைகள் **இருந்தன**.

இவ்வாக்கியங்களில் உள்ள **கண்டான்** என்னும் சொல் வேடனுடைய தொழிலேயும், **வசிக்கிருர்கள்** என்னும் சொல் தொழிலாளிகளுடைய தொழிலேயும், **வசிக்கும்** என்னும் சொல் ஆட்டினுடைய தொழிலேயும், **ஓடுகிறது** என்னும் சொல் ஆற்றின் தொழிலேயும், **இருந்தன** என்னும் சொல் பாறைகளின் தொழிலேயும் குறிக்கின்றன. இவ்வாறு இவை பொருள்களின் தொழிலேக் குறிப்பதால், இவற்றிற்கு **வினேச் சொற்கள்** என்பது பெயர்.

5. **ஏதாவது ஒரு பொருள் செய்யும் தொழிலே (வினேயை)க் குறிக்கும் சொல் வினேச்சொல் எனப்படும்.** ஆகவே சொல்—பெயர்ச்சொல், வினேச்சொல் என இரண்டு வகை ஆயிற்று. வினே—காரியம் அல்லது தொழில்.

10. கொசு

பிராணி—இனத்தை — நுட்பமானவை — இறக்கைகளும்—உறிஞ்சும்—கிருமிகளை—மலேரியா — காய்ச்சலை — யானைக்காலை—சாக்கடைத் தண்ணீரிலும்—துரும்புகள்—பண்டங்களிலும்—உணவுப் பொருள்களிலும்—மாறி மாறி—பானங்களையும்.

கொசு ஒரு சிறிய பிராணி. கொசு நன்றாய்த் தெரியும் பொருட்டுப் படத்தில் பெரிதாய்ப் போடப்பட்டு இருக்கிறது. கொசுவில் பல வகைகள் உண்டு. கொசு, பூச்சி இனத்தைச் சேர்ந்தது. அது பகலில் இருட்டான இடங்களில் மறைந்திருக்கும். அதன் தலை சிறியது; கண்கள் நுட்பமானவை. கொசு நம் உடலைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும். அதற்கு ஆறு கால்களும் இரண்டு இறக்கைகளும் உண்டு.



கொசு தன் ஆகாரத்தை இரவில் தான் தேடும். அதற்கு மனிதனுடைய இரத்தமே முக்கிய உணவு ஆகும். கொசு இரத்தத்தை உறிஞ்சும் போது அத்துடன் நோய்க் கிருமிகளையும் சேர்த்து உறிஞ்சும். அதுவே பிறரைக் கடிக்கும் பொழுது அந்தக் கிருமிகள் அவர்களுடைய இரத்தத்தில் கலக்கும். அதனால் பலருக்கும் நோய் பரவும்.

கொசுக் கடியினால் காய்ச்சல் உண்டாகிறது. ஒரு வகைக் கொசு 'மலேரியா' என்னும் கொடிய காய்ச்சலைப் பரப்புகிறது. மற்றொரு வகைக் கொசு

'யானைக்கால் வியாதி 'யைப் பரவச் செய்கிறது. அது இரவில் காது பக்கமாய்ச் சப்தம் செய்யும்; உடம்பைக் கடித்துத் தூக்கத்திற்கு இடையூறு செய்யும்.

கொசு, அழுக்குத் தண்ணீரிலும் சாக்கடைத் தண்ணீரிலும் முட்டை இடும். அந்த முட்டைகள் சிறு துரும்புகள்மீது ஒட்டிக்கொண்டு மிதக்கும். முட்டைகளிலிருந்து புழுக்கள் வெளிப்படும். சில நாட்கள் சென்ற பின்பு, புழுக்கள் கொசுக்களாக மாறுகின்றன.

ஈயும், கொசுவைப் போலப் பூச்சி வகையைச் சேர்ந்தது. அது அழுகிய பண்டங்களிலும், மலத்திலும், உணவுப் பொருள்களிலும், புண்களிலும் மாறி மாறி உட்காரும். ஈயும் நோயைப் பரவச் செய்கிறது. ஆகையால் ஈ விழுந்து கிடக்கும் பானங்களையும் பண்டங்களையும் உட்கொள்ளுதல் தவறு.

கேள்விகள்

1. கொசு எவ்வாறு உற்பத்தியாகிறது?
2. கொசு விருத்தியடைவதை எவ்வாறு தடுக்கலாம்?
3. கொசு, எப்படி வியாதியைப் பரவச் செய்கிறது?
4. எப்பொழுது கொசுவின் உபத்திரவம் அதிகமாக இருக்கும்?
5. கொசுவினால் பரவும் வியாதிகள் இரண்டைக் கூறுக.
6. கொசுவைப் போலவே வியாதியைப் பரவச் செய்யும் மற்றொரு பிராணி எது?
7. கொசுவினால் ஏற்படும் தீங்குகளை இரண்டு வாக்கியங்களில் எழுதுக.

பயிற்சி

1. (i) பிரித்தெழுதுதல்: குளமிருக்கிறது = குளம் + இருக்கிறது.
ஊரிலிருந்து = ஊரில் + இருந்து.
காரியம் = கார் + ஈயம்.

(ii) இவ்வாறே கீழ்க்காணும் சொற்களைப் பிரித்தெழுதுக :—

(1) இரண்டிறக்கைகளும். (2) மனிதனுடைய. (3) இரத்தத்தை யுறிஞ்சும். (4) இருட்டான விடங்களில்.

2. தனித்தனி வாக்கியங்களில் அமைக்க :—பானம், கிருமிகள், உறிஞ்சும், இடையூறு, மாறிமாறி.

3. பொருள் கூறுக :—குன்று, ஆபரணம், அருகு, பானம்.

4. எதிர்ப் பதம் கூறுக :—சிறிய, இருள், கஷ்டம், நன்மை.

5. பன்மைச் சொற்களைக் கூறுக:—கொசு, ஈ, கால், வியாதி, பெண்.

6. பாடத்தின் முதல் இரு பாராக்களில் உள்ள வினைச் சொற்களைப் பொருக்கி எழுதுக.

7. மூன்றும் நான்காம் பாராக்களில் உள்ள பெயர்ச் சொற்களைப் பொருக்கி எழுதுக.

11. வாத்து

சேற்றுநீரை—குஞ்சுபொரிக்கும்— அமைந்திருக்கிறது—பாதம்—இணைக்கப்பட்டு—அலகை—அடைகாப்பது—மந்தை மந்தையாக—மேய்க்கப்படும்—மெத்தைக்கு—பதிலாக—ஏற்றபடி — வேகமாய்—உபயோகிப்பதும்.

வாத்து, பறவை இனத்தைச் சேர்ந்தது. அது நீரிலும் நிலத்திலும் வாழும் பறவை. அதன் பாதம், தண்ணீரில் நீந்துவதற்கு ஏற்றபடி அமைந்திருக்கிறது. அதன் கால் விரல்கள் தோலால் இணைக்கப்பட்டு இருக்கின்றன. அதனல் அது நிலத்தில் வேகமாய் ஓட முடியாது. அது நடக்கும் போது அசைந்து அசைந்தே நடக்கும். வாத்தின் அலகு அகன்று, தட்டையாய் இருக்கும். அதன் இறகு மிருதுவாக இருக்கும் ; அதில் தண்ணீர் ஒட்டாது.

அது தண்ணீரில் உள்ள சிறிய உயிர்களைப் பிடித்துத் தின்னும். அது தன் அலகைச் சேற்றி

னுள் விட்டுக் கிளறி, அதிலிருக்கும் பூச்சி புழுக் களைத் தின்கிறது. அதன் அலகின் உட்புறத்தில் பற்கள் இருக்கின்றன. அவை சீப்புப்போல் இருக் கின்றன. அதனுல் அது சேற்று நீரைக் குடித்து, இரண்டு அலகையும் சேர்த்து அழுத்தும். அப் பொழுது சேறு வெளிப்பட்டுப் பூச்சிகள் வாயில் தங்கி விடும். வாத்து, தானியங்களையும் தின்னும்.



வாத்து முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆனல், அது முட்டையை அடைகாப்பது இல்லை. அதனுல் வாத்தை வளர்ப்பவர், அதன் முட்டையைக் கோழியிடம் வைத்துக் குஞ்சு பொரிக்கச் செய் கின்றுர்கள்.

மனிதனுடைய உணவுப் பொருள்களில் வாத்து முட்டையும் ஒன்று. வாத்துகள் மந்தை மந் தையாக மடக்கி மேய்க்கப்படும். பஞ்சுக்குப் பதிலாக

வாத்தின் இறகுகளை மெத்தைக்கு உபயோகிப்பதும் உண்டு.

கேள்விகள்

1. வாத்துக்கும் பிற பறவைகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
2. வாத்தின் பாதங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன? ஏன்?
3. வாத்து முட்டையை எவ்வாறு குஞ்சு பொரிக்கச் செய்வர்?
4. வாத்தின் இறகுகளை எதற்குப் பதிலாக உபயோகிக்கலாம்?

பயிற்சி

1. பிரித்தெழுதுக :—வாத்தினலகு, தண்ணீரொட்டாது.

2. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைக்க :—கிளறி, அழுத்தும், ஏற்றபடி, அசைந்தசைந்து.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைக்க:— (1) கொசு ஒரு———பிராணி. (2)——கொசுவைப்போல———சேர்ந்தது. (3) வாத்தின் இறகில்——— ஒட்டாது. (4) வாத்து——— இட்டு———பொரிக்கும்.

4. இருபொருள் கூறுக :—வரி, நகை, ஆறு, குட்டை, மாலை.

5. ஒருமைச் சொற்களைக் கூறுக:—இறக்கைகள், மாறுகின்றன, விரல்கள், செய்கிறார்கள்.

6. பொருத்தமானவற்றைச் சேர்த்தெழுது :—

(1) ஆடு ஒரு	பறவை.
(2) கொசு ஒரு	மிருகம்.
(3) வாத்து	குட்டிபோடும்.
(4) யானை	முட்டையிடும்.

7. இப்பாடத்தில் இரண்டாம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் அடியிற் கண்டவாறு கட்டம் போட்டு எழுது.

எண்	பெயர்ச் சொல்	வினைச் சொல்
1.	தண்ணீரில்	தின்னும்

12. நல்ல வார்த்தை



1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன் :
சீருக்கெல் லாமுத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

2. வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக்கு ஒருநிற மாகும்.

3. சாம்பல் நிறம்ஒரு குட்டி—கருஞ்
சாந்து நிறம்ஒரு குட்டி
பாம்பு நிறம்ஒரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறம்ஒரு குட்டி.

4. எந்த நிறம்இருந் தாலும்—அவை
யாவும் ஒரேதரம் அன்றோ ?
இந்த நிறம்சிறி தென்றும்—இஃது
ஏற்றம்என் றும்சொல்ல லாமோ ?

5. வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானிடர் வேற்றுமை இல்லை ;
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர் !

—பாரதியார்

13. மீன்

வாழும்—பிராணி—வகைப்படும்—நீர்நிலைகளில்—வேறுவேறு—வடிவங்கள்—உள்ளவையும் — சிறகுகள் — எடுக்கப்படின் — சூரிய வெப்பத்தினல்—வழவழப்பாக—உறுப்பும் — நீந்தவும்—மிதக்கவும்—பிளவுகள்—திரும்புவதற்கு—உதவுகின்றன—சுவாசிக்கிறது — செம்படவர்கள்—விற்பார்கள்—தொழில்—வலைபோட்டு—வலைஞர் — கடலோரமுள்ள—கரையாளர்—சொல்லப்படுவார்கள் -- தினந்தோறும்—அனுப்புவார்கள்—இரை—சுத்தமாக்குகின்றது.

மீன் நீரில் வாழும் பிராணி. அது பல வகைப்படும். ஓடை போன்ற சிறிய நீர் நிலைகளில் சிறிய மீன்களே இருக்கும். பெரிய நீர் நிலைகளில் பெரிய மீன்கள் இருக்கும். மீன்களில் வேறு வேறு நிறம் உள்ளவையும், வேறு வேறு வடிவங்கள் உள்ளவையும் இருக்கின்றன. மீன்களுக்குத் தலை சிறுத்தும், உடல் பெருத்தும் இருக்கும். மீனுக்கு வால் உண்டு. அதன் தேகம் வழவழப்பாக இருக்கும்; இரண்டு பக்கங்களிலும் இரண்டு சிறகுகள் இருக்கின்றன.

மீன் தண்ணீரிலிருந்து எடுக்கப்படின், இறந்து விடும். மீன் அதிகமாக முட்டை இடும். முட்டைகள் சூரிய வெப்பத்தினல் குஞ்சுகள் ஆகின்றன. மீனின் ஒவ்வோர் உறுப்பும் அதற்கு உபயோகப்படுகிறது. சிறகுகள் நீரில் நீந்தவும் மிதக்கவும் உதவுகின்றன. அதன் வாலில் உள்ள பிளவுகள், அது நீரில் திரும்புவதற்கு உதவுகின்றன. மீன் வாயினுல் தண்ணீரை உறிஞ்சி, அதிலிருக்கும் காற்றைச் சுவாசிக்கிறது.



மனிதனுடைய உணவுப் பொருள்களுள் மீனும் ஒன்று. செம்படவர்கள் மீனைப் பிடித்து விற்பார்கள். அவர்களுக்கு மீன் பிடிப்பதே தொழில். அவர்கள் வலை போட்டு மீன் பிடிப்பதால், அவர்களுக்கு வலைஞர் என்னும் பெயர் உண்டாயிற்று. அவர்கள் கடல் ஓரமுள்ள ஊர்களில் வசிக்கிறார்கள். அதனுல் அவர்கள் கரையார் என்றும், கரையா

ளர் என்றும் சொல்லப்படுவார்கள். அவர்கள் கடலில் உள்ள மீனைத் தினந்தோறும் பிடித்து விற்பார்கள்; அவற்றைப் பக்குவம் செய்து வெளி இடங்களுக்கும் அனுப்புவார்கள்.

தண்ணீரில் உள்ள பூச்சி, புழுக்களும் சிறு மீன்களுமே மீனுக்கு உணவு ஆகும். 'சிறு மீன் எல்லாம் பெருமீனுக்கு இரை' என்பது நமது நாட்டுப் பழமொழி. மீன் நீரில் உள்ள அழுக்கையும் தின்று, தண்ணீரைச் சுத்தம் செய்கின்றது.

கேள்விகள்

1. மீன் எங்கு வசிக்கும்?
2. மீனின் உறுப்புகள் எவை?
3. மீன் முட்டைகள் எதனுல் குஞ்சாகின்றன?
4. மீனுக்கு வாலில் உள்ள பிளவுகளால் என்ன உபயோகம்?
5. மீன் எதனை எவ்வாறு சுவாசிக்கின்றது?
6. மீனுக்கு உணவாவன யாவை?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைக்க:—
(1) மீன்———முட்டையிடும். (2) சூரிய———குஞ்சுகள்———.
(3) ——— மீனைப் பிடித்து விற்பார்கள்.

2. பொருள் வித்தியாசம் அறிக:—காலை, காளை; அறி, அரி; உலோகம், உலகம்; அரை, அறை; மாரி, மாறி; இரை, இறை.

3. பாடத்தின் கடைசிப் பாராவில் வந்துள்ள பெயர்ச் சொல், வினைச் சொற்களை எழுதுக.

4. தனித்தனி வாக்கியங்களில் அமைக்க:—நீர்நிலை, வழவழப்பு, சூரிய வெப்பம், வேறு வேறு, சாதாரணம், பக்குவம், சுத்தம்.

5. கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளின்படி மீனைப்பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக:—(1) வகைகள், (2) வசிக்கும் இடம், (3) உறுப்புகளும் அவற்றின் உபயோகமும், (4) ஆகாரம், (5) விருத்தி, (6) பயன், (7) பிடிக்கும் விதம்.

14. யானை



குட்டையாக — துதிக்கை — தும்பிக்கை — நுனி — அரண்மனை களிலும் — அலங்காரத்திற்காக — வேட்டை யாடவும் — யானைக்குத் தீனி — பழமொழி — செலவு — தந்தம் — கத்திப் பிடி — நினைவில் — தீங்கு — மறவாமல் — பழிக்குப்பழி — இயல்பு.

யானை எல்லா மிருகங்களிலும் பெரியது. அதுவே எல்லா மிருகங்களையும் விடப் பலம் உள்ளது. யானை காட்டு மிருகம். அது கருமை நிறம் உடையது. அது பத்துப் பன்னிரண்டு அடிகளுக்கு மேலும் உயரமாக வளரும். யானையின் கண்கள் மிகச் சிறியவை. அதற்குக் குறுகிய கழுத்தும், முறம் போன்ற காதுகளும் இருக்கின்றன. அதன் கால்கள் பருத்துக் குட்டையாக இருக்கும். யானையின் உடல் பருத்து, உறுதியாய் இருக்கும். அதற்குத் துடைப்பம் போன்ற சிறிய வால் உண்டு. ஆண் யானைக்கு மேல் வாயில் இரு பக்கங்களிலும் தந்தம் உண்டு.

யானையின் முகத்திலிருநது நீண்டு தொங்கும் உறுப்புக்குத் 'துதிக்கை' என்பது பெயர். இதைத் 'தும்பிக்கை' என்றும் சொல்லுவார்கள்.

இது, மற்ற மிருகங்களுக்கு இல்லை. நமக்குக் கைகள் உதவுதல் போல யானைக்குத் துதிக்கை உதவுகிறது. அதன் நுனியில் விரல் போன்ற ஒரு சிறிய உறுப்பு இருக்கின்றது. யானை அவ்வுறுப்பால் மிகச் சிறிய பொருளையும் எடுத்துவிடும்.

யானை புல், தழை, பழம், செடி, கொடி இவற்றைத் தின்று உயிர் வாழ்கிறது. யானையைப் பழக்கி வளர்ப்பவர்கள் அதற்கு அரிசியையும் ஆகாரமாக வைக்கிறார்கள். யானைக்குக் கரும்பைத் தின்பதில் பிரியம் அதிகம்.

சிலர் காட்டிலிருந்து யானைகளைப் பிடித்து வந்து பழக்கி வளர்க்கிறார்கள். பழக்கப்பட்ட யானைகள் மனிதர்களுக்குப் பல வேலைகளைச் செய்கின்றன. யானைகள் கோவில்களிலும் அரண்மனைகளிலும் அலங்காரத்திற்காக வளர்க்கப்படுகின்றன. பெரிய மரக் கட்டைகளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தூக்கிச் செல்ல யானைகள் பயன்படும். இவை வேட்டை ஆடவும் சண்டை செய்யவும் உதவும்.

யானைக்குத் தீனி போடுவது கடினம்; செலவு அதிகம் ஆகும். அதனால்தான், செலவு அதிகப்படும் விஷயங்களில், 'யானையைக் கட்டித் தீனி போடுவது போல்' என்று நம்மவர் பேசும் பொழுது சொல்வது உண்டு. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது ஒரு பழமொழி. இஃது உண்மையே. யானையின் உறுப்புகளில் அதிக விலை உயர்ந்தது தந்தம். தந்தத்தினால் சீப்பு, கத்திப் பிடி, பெட்டி முதலிய சாமான்கள் செய்யப்படுகின்றன.

மனிதன் தனக்குச் செய்யும் நன்மையையும் தீமையையும் அறிந்து நினைவில் வைத்துக்கொள்ளும் சக்தி யானைக்கு உண்டு. யானை தனக்குத் தீங்கு செய்தவர்களை, எவ்வளவு காலம் ஆனாலும், மறவாமல் இருந்து, பழிக்குப் பழி வாங்கிவிடும் குணம் உடையது.

கேள்விகள்

1. எந்த உறுப்பிற்குத் துதிக்கை என்பது பெயர்?
2. யானைக்குத் துதிக்கை எவ்வாறு உதவுகின்றது?
3. யானைக்கு ஆகாரமாக வைக்கும் பொருள்கள் யாவை?
4. பழகிய யானைகள் எவ்வெவ்வாறு உபயோகப்படும்?
5. யானையைப் பற்றிக் கூறப்படும் பழமொழிகள் யாவை?
6. யானையின் உறுப்புகளில் அதிக விலை உயர்ந்தது எது?

பயிற்சி

1. பிரித்தெழுதுக:—தந்தங்களுண்டு, கரும்பினிடத்தில், வேட்டையாடவும், தூக்கியெடுத்தார்.

2. தனிவாக்கியங்களாகப் பிரித்தெழுதுக:—யானைக்குக் குறுகிய கழுத்தும், முறம் போன்ற காதுகளும், சிறியகண்களும், நீண்ட துதிக்கையும் இருக்கின்றன.

3. கீழே சில பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒவ்வொரு வினைச் சொல்லையும் அது அதற்கு ஏற்ற பெயர்ச் சொல்லோடு சேர்த்துப் பொருத்திக் காட்டுக:—

மீன்	உதவுகின்றன
யானைகள்	உண்டு
தந்தம்	வசிக்கும்
செம்படவர்கள்	வளர்க்கப்படுகின்றன
பிளவுகள்	விற்பார்கள்.

4. எதிர்ப் பதம் கூறுக:—பெரியது, இருந்தாலும், குட்டை, வழவழப்பு.

15. காக்கையும் வடையும்



குறிப்பு:—இப்படங்களின் மூலமாக விளக்கப்பட்டுள்ள கதையைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களையும் தொடர்களையும் உபயோகித்து எழுது.

கிழவி—வடை—காக்கை—கௌவிக்கொண்டு — நரி — பாட்டுப் பாடு—பாட—வாயைத் திறந்தது—கீழே விழுந்தது—ஓடிவிட்டது.

கேள்விகள்

1. நரி காகத்தை எப்படி ஏமாற்றியது?
2. நீ இப்பாடத்தால் அறியும் நீதி யாது?

பயிற்சி

1. இக்கதைக்குப் பொருத்தமான வேறு பெயர் கொடு.
2. நீ எழுதும் கதையில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் ஒருமை, பன்மை முறைப்படி எழுது.
3. வேறு சொல் கூறு:—நகை, நடுவில், அருகில், கடந்தன, காய்ச்சல், இயல்பு.
4. பொருத்தமான சொற்களைச் சேர்த்து வாக்கியங்கள் ஆக்கு.—

(1) மீன்	காட்டில் வசிக்கும்	பிராணி
(2) வாத்து	நீரில் வசிக்கும்	மிருகம்
(3) யானை	நீரிலும் நிலத்திலும் வசிக்கும்	பிராணி

16. முயலும் சிங்கமும்

ஒப்பந்தம்—விலங்கு—உடன்பட்டது—வரத் தவறினால்—வனத்தில்—பயமுறுத்தியது—கட்டளைப்படி—சம்மதித்து —முறைப்படியே —புத்திக்கூர்மை—சாமர்த்தியத்தால்—மெல்லமெல்ல —அதிகரித்தது—குகையினின்று — தாமதித்து — தவறு — புறப்பட்டது —முன்னே—பின்னே—பாழுங் கிணற்றை—எட்டிப் பார்த்து—ஒளிந்துகொள்வாயானால்—பாய்ந்தது—அமுந்தி—சந்தோஷம்—வாழ்த்தின.

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. அது மற்ற மிருகங்களைத் தின்று வசித்து வந்தது. அக் காட்டில் இருந்த விலங்குகள் எல்லாம் பயந்து, சிங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. அதாவது, சிங்கத்தின் உணவுக்காகத் தினம் ஒரு விலங்கு அதனிடம் அனுப்பப்படும் என்பதே. சிங்கம் அதற்கு உடன்பட்டது. அது அவற்றை நோக்கி, "ஒப்பந்தப்படி மிருகம் வரத் தவறினால், நான் வனத்

தில் உள்ள எல்லா மிருகங்களையும் கொன்று விடுவேன்" என்று பயமுறுத்தியது. மிருகங்கள் அதன் கட்டளைப்படி நடப்பதாகச் சம்மதித்துப் போயின.

அந்த முறைப்படியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலங்கு சிங்கத்திற்கு இரையாகிக் கொண்டே வந்தது.



இப்படிப் பல நாள்கள் கழிந்தன. ஒரு நாள் ஒரு கிழ முயலின் முறை வந்தது. அந்த முயல் புத்திக் கூர்மை உடையது. அது, "நாம் இன்று சிங்கத்துக்கு இரையாவது நிச்சயம்; ஆயினும் நம்முடைய சாமர்த்தியத்தால் அதை ஏன் கொல்லக் கூடாது?" என்று எண்ணிக்கொண்டு, மெல்ல மெல்ல நடந்து சென்றது.

சிங்கத்தின் சாப்பாட்டு நேரம் கடந்து விட்டது. அதற்குப் பசி அதிகரித்தது. அதனல் அது கடுங்கோபம் கொண்டது; குகையினின்றும் வெளியே வந்தது; அப்பொழுது அடிமேல் அடி வைத்து மெல்ல நடந்து வரும் முயலைக் கண்டது. முயல் பயந்து வருவது போலப் பாசாங்கு செய்தது. சிங்கம் அதை நோக்கி, "ஏன் இவ்வளவு நேரம் தாமதித்து வந்தாய்?" என்று கோபத்தோடு கேட்டது. முயல் மரியாதையுடன், "ஐயனே, வழியில் வேறொரு சிங்கம் என்னைத் தடுத்துவிட்டது. அதனல்தான் நான் நேரம் கழித்து வரவேண்டியது

ஆயிற்று. என் மீது தவறு இல்லை" என்றது. உடனே சிங்கம், "அப்படியா! இக்காட்டில் வேறொரு சிங்கமும் இருக்கிறதோ? உடனே அதை எனக்குக் காட்டு; வா, போவோம்" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டது.

முயல் முன்னே செல்லச் சிங்கம் பின்னே சென்றது. முயல், சேறும் நீரும் நிறைந்த ஒரு பாழும் கிணற்றைக் காட்டி, "நான் சொன்ன சிங்கம் இதற்குள் மறைந்து கொண்டு இருக்கிறது" என்றது. சிங்கம் கிணற்றில் எட்டிப் பார்த்தது. அப்போது அதன் நிழல் தண்ணீரில் தெரிந்தது. சிங்கம், அந்த நிழலை வேறு ஒரு சிங்கம் என்று நினைத்துக்கொண்டது. அது உடனே கோபத்தோடு, "நீ, கிணற்றில் ஒளிந்துகொள்வாயானால், நான் உன்னை விட்டு விடுவேனோ?" என்று சொல்லிக்கொண்டே கிணற்றில் பாய்ந்தது.



அதைக் கண்ட முயல் ஓடிவிட்டது. சிங்கம் சேற்றில் அழுந்தி இறந்தது. காட்டில் இருந்த மிருகங்கள் எல்லாம் சந்தோஷம் அடைந்து, கிழ முயலை வாயார வாழ்த்தின.

'அறிவுள்ளவனே ஆண்மையாளன்.'

கேள்விகள்

1. சிங்கத்தின் நிபந்தனை யாது?
2. முயல், தான் தாமதித்து வந்ததற்கு என்ன காரணம் கூறிற்று?

3. முயல் சிங்கத்தை எவ்வாறு கொன்றது?

4. இக்கதையிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளும் நீதி என்ன?

பயிற்சி

1. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களை அமைத்துப் பன்னிரண்டு வாக்கியங்களில் இக்கதையை எழுதுக:—

காட்டில்——சிங்கம்——திரிந்தது——மிருகங்கள்——ஒன்றுகூடி——முறையிட்டன——இணங்கிற்று——முயலின் முறை——தந்திரம்——நேரம் கடந்து——மற்றொரு சிங்கம்——பாழுங் கிணறு——எட்டிப் பார்த்தது——கோபம் கொண்டு——பாய்ந்தது——தப்பி ஓடியது.

2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வினைச்சொற்களை அமைக்க:—(1) ஒரு சிங்கம்———(இருந்தது, இருந்தன). (2) விலங்குகள் சிங்கத்தினிடம்———(போயிற்று, போயின). (3) நாள்கள் ———கழிந்தது, கழிந்தன.) (4) முயல் ———(கூறிற்று, கூறின.) (5) சிங்கம் ———(நினைத்தது, நினைத்தன.)

3. பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் தனித்தனியே பிரித்து எழுதுக:—காடு, சிங்கம், வந்தது, விலங்குகள், வசித்தது, சென்றன, இரை, கட்டளை, இட்டது, போயின, நாள்கள், முயல், வந்தது, முறை, நேரம், கோபம், குகை.

4. பொருள் கூறுக:—கட்டளை, தாமதித்து, உறுப்பு, பிரியம்.

5. வேறு சொல் கூறுக:—சந்தோஷம், காடு, அலங்காரம், இரை, அதிகரித்தது, சம்மதித்து, விலங்கு, கோபம்.

6. முதல் இரண்டு பாராக்களில் உள்ள ஒருமை பன்மைச் சொற்களைக் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு கட்டம் போட்டு எழுதுக:—

எண்	ஒருமை	பன்மை
1	சிங்கம்	மிருகங்களை

17. கீழூரில் நடந்த சம்பவம்

மடாதிபதி — யானைப்பாகன் — முதன்முதலில் — வேடிக்கை— நாளடைவில்—தைரியமாக—தொடங்கினார்கள்—சில சமயங்களில்— ஓரங்களில்—ஒடிப்பதையும் — அடுக்கி வைத்துக்கொண்டு — மகிழ்ந் தார்கள்—கண்ணாடித் துண்டுகளை—வழக்கம் போல—களிப்புடன்— அழுந்தின—அளவு கடந்த — அடங்காமல்—ஒரே பிடியாய்—வீசி— எறிந்தது—மிதிக்க—கவனிக்கவில்லை — தொங்கவிட்டுக்கொண்டு— அசையாமல் — தணிந்தது — பாஷையில் — குனிந்து — மடக்கிக் கொண்டு — உயர்த்தி — எல்லாவற்றையும் — காயத்திற்கு — குணப் படுத்தினான்.

கீழூர் என்பது ஒரு சிறிய கிராமம். அதில் சுமார் இருநூறு குடும்பங்கள் இருக்கின்றன. அந்த ஊருக்கு ஒரு மடாதிபதி வந்தார். அவர் அவ்வூர் ஜனங்களுக்குக் குரு. அவரோடு அவர் வளர்த்த யானையும் வந்தது.

அவர் அவ்வூரிலேயே சில நாட்கள் தங்கி இருந்தார். தினந்தோறும் யானைப்பாகன் யானை யைத் தெருக்களில் அழைத்துச் சென்றான்; யானை யைக் கொண்டு ஜனங்களுக்கு வேடிக்கை காண்பித் தான். அவன் சிறுவர்களை அதன் மேல் ஏற்றி உட் காரவைப்பதும் வழக்கம். சிறுவர்கள், முதல் முதலில் யானையைக் கண்டு பயந்தார்கள். ஆனால் அவர்கள் பயம் நாளடைவில் நீங்கிவிட்டது. அதனால் அவர் கள், தைரியமாக அதன் பின்னே ஓடவும், அதன் வாலைத் தொடவும், பக்கத்தில் நிற்கவும் ஆரம்பித் தார்கள்; அதற்குப் பழம் முதலியவற்றைக் கொடுக் கத் தொடங்கினார்கள். அவர்கள் சில சமயங்களில் யானையின் பின்னே ஓடினார்கள்; சாலை ஓரங்களில் இருந்த மரங்களின் கிளைகளை யானை ஒடித்ததையும்,

அவற்றைத் தந்தங்களில் அடுக்கி வைத்துக்கொண்டு வந்ததையும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

அச் சிறுவர்களுள் கிருஷ்ணன், சுப்பன் என்பவர் இருவர். ஒரு நாள் அவர்கள் வெறுந் தேங்காய் ஓட்டில் கண்ணுடித் துண்டுகளைப் போட்டார்கள்; அதனை முழுத் தேங்காயைப் போலவே மூடி ஒட்ட வைத்தார்கள்; பிறகு அதை யானைக்குக் கொடுக்க வந்தார்கள். யானையோ, வழக்கம் போலச் சிறுவர்கள் கொடுக்க வந்த ஆகாரத்தைக் களிப்புடன் உண்ண அங்கே வந்தது. கிருஷ்ணன் என்பவன், தான் தயாரித்த பொய்த் தேங்காயை அதன் துதிக்கை



யில் வைத்தான். யானை அதை எடுத்துத் தன் வாயினுள் போட்டுக் கடித்தது. கண்ணுடித் துண்டுகள் வாயில் அழுந்தின; இரத்தம் பெருகிற்று. யானைக்கு வலி தாங்க முடியவில்லை. அப்போது அதற்கு வந்த

கோபத்திற்கு அளவே இல்லை. சிறுவர் இருவரும் ஓடி ஒளிந்துகொண்டார்கள். ஆனால், யானை அச் சம்பவத்தை மறக்கவே இல்லை.

ஒரு நாள் அது சாலைக்குச் சென்று, தழை ஒடித்துக்கொண்டு, திரும்பி வந்தது. வழியில் கிருஷ்ணனும் சுப்பனும் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். யானை அவர்களைப் பார்த்துவிட்டது. அதற்கு அளவு கடந்த கோபம் வந்துவிட்டது. உடனே அது பாகனுக்கு அடங்காமல் ஓடியது. அது தன் துதிக்கையால் கிருஷ்ணனை ஒரே பிடியாய்ப்



பிடித்து இழுத்தது; அவனைச் சுற்றி எடுத்து வீசி எறிந்தது. கிருஷ்ணன் ஒரு குழியில் போய் விழுந்தான். யானை அவனை மிதிக்க எண்ணி ஓடினது. ஆனால், கிருஷ்ணன் குழியில் விழுந்ததை யானை கவனிக்கவில்லை. அது, குழியைப் பாராமல் நேரே

ஓடிற்று. அது குழியைத் தாண்டிச் சென்றதும், அங்கு இருந்தவர்களில் ஒருவர், கிருஷ்ணனைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டார்.

யானை, கிருஷ்ணனைக் காணுமல் சுற்றிச் சுற்றிப் பார்த்தது. அது ஒரு மரத்தின் கீழ் வந்து துதிக் கையைத் தொங்கவிட்டுக்கொண்டு அசையாமல் நின்றது. உடனே பாகன் மெதுவாகக் கீழே இறங்கி, அதைத் தடவிக் கொடுத்தான். அப்போது அதன் கோபம் தணிந்தது. அது கண்ட பாகன், "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று அதன் பாஷையில் கேட்டான்.

யானை, உடனே தன்னுடைய முன் இரண்டு கால்களையும் மடக்கிக்கொண்டு கீழே குனிந்தது; துதிக்கையை மேலே உயர்த்தி வாயைத் திறந்து காட்டியது. அதன் வாயில் சில கண்ணுடித் துண்டு கள் இருந்தன. உடனே யானைப்பாகன் விஷயம் உணர்ந்துகொண்டான். அவன் அக் கண்ணுடித் துண்டுகள் எல்லாவற்றையும் எடுத்துவிட்டான்; காயத்திற்கு மருந்து போட்டுக் குணப்படுத்தினுன்.

சிறுவர்களே, நீங்கள் பிராணிகளிடத்தில் அன்போடு நடந்து கொள்ளுங்கள்; எதற்கும் தீமை செய்யாதீர்கள்.

கேள்விகள்

1. கிருஷ்ணன் யானைக்குச் செய்த தீங்கு யாது?
2. அதனுல் அவனுக்கு என்ன நேர்ந்தது?
3. அவன் எவ்வாறு தப்பினுன்?
4. இப்பாடத்திலிருந்து நீ என்ன அறிகிருய்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :—(1) அவர் வளர்த்த யானையும்——. (2) அவர் அவ்வூரிலேயே —— தங்கி ——.

2. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—ஆகாரம், களிப்பு, ஒரே பிடியாய், காயம்.

3. எதிர் மொழி கூறுக :—சிறுவர், ஏற்றி, மூடு, மெதுவாக, பிடி.

4. இப்பாடத்தில் எத்தனைப் பாராக்கள் இருக்கின்றன ? சொல்.

18. காட்சிச் சாலை



ஒரு காட்சி—புலிக் கூண்டு

பந்தம் எரியுதோடி ?—கண்கள்
பார்க்க நடுங்குதடி !
குந்தம்வாள் ஈட்டியெல்லாம்—கூடவே
கொண்டு திரியுதடி ! (1)

வாயைப் பிளக்குதடி !—கையுறை
வாளும் உருவுதடி !
பேயைப் படைத்தபின்னே—இதனையும்
பிரமன் படைத்தானடி ! (2)

வாலை முறுக்குதுபார் !—வால்நுனி
வட்டம் சுழலுதுபார் !
சாலப் பதுங்குதுபார் !—நம்மீது
சாடவும் நோக்குதுபார். (3)

இடித்து முழங்குதடி !—தொண்டையும்
இரும்பாலே செய்ததோடி ?
அடுத்து நெருங்காதே நீ—அதுமிக
ஆங்காரம் கொள்ளுதடி. (4)

மானைப் படைத்ததெய்வம்—புலியையும்
வளர்த்து விடலாமோடி ?
தேனைப் பழித்தசொல்லாய் !—எனக்குநீ
தெரிந்துரை செய்வாயோடி ?

—தேசிக விநாயகம் பிள்ளை

கேள்விகள்

1. மிருகக் காட்சிச் சாலை என்றால் என்ன ?
2. மிருகக்காட்சிச் சாலையைப் பார்ப்பதால் என்ன பயன் ?
3. அங்கு வேறு எம் மிருகங்களைப் பார்க்கலாம் ?
4. இப்பாட்டில் புலியைப்பற்றிக் கூறப்பட்டுள்ளவை யாவை ?
5. காட்சிச் சாலையில் மிருகங்களை எப்படி வைத்திருக்கிறார்கள் ?

பயிற்சி

1. இப்பாட்டில் கூறப்பட்டுள்ள விஷயங்களைக்கொண்டு புலியைப் பற்றி 10 வாக்கியங்கள் எழுது.

2. இப்பாட்டில் கூறப்பட்டுள்ள விஷயங்களை அமைத்து இரு பெண்கள் சம்பாஷிக்கிற மாதிரி எழுது.

3. இப்பாட்டின் உதவியைக்கொண்டு நீ அறிந்த வேறு ஒரு கொடிய மிருகத்தைப் பற்றி 10 வாக்கியங்கள் எழுது.

4. நீ மிருகக்காட்சிச் சாலையிலாவது, சர்க்கஸிலாவது பார்த்துள்ள ஒரு மிருகத்தைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

19. யானையும் தையற்காரனும்



இப் படங்களில் விளக்கப்பட்டிருக்கும் கதையை எட்டு வாக்கியங்களில் எழுது.

கேள்விகள்

1. தையற்காரன் செய்த குறும்பு யாது ?

2. யானை அவனை என்ன செய்தது ?

3. இதனால் அறியப்படும் யானையின் குணம் யாது ?

4. இக்குணத்தையே அறிவிப்பதாக இப்புத்தகத்தில் வந்துள்ள வேறு கதை யாது ?

5. நீ இதனால் அறியும் நீதி என்ன ?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில், எதிரில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களில் தக்கதை அமைத்தெழுது :—

(i) யானை ஒரு———மிருகம். (காட்டு, வீட்டு)

(ii) யானை மிருகங்களில்———. (சிறியது, பெரியது)

(iii) யானை —— நிறம் உள்ளது. (கருமை, வெண்மை)

(iv) யானைக்கு————உண்டு. (கொம்பு, தந்தம்)

2. இரண்டு சிறு வாக்கியங்களாக எழுது:—

(i) யானை சேற்று நீரை உறிஞ்சிவந்து தையற்காரன் மேல் இறைத்தது.

(ii) தையற்காரன் யானையை ஏமாற்ற எண்ணி, பழத்தில் ஊசியைச் செருகிக் கொடுத்தான்.

(iii) தையற்காரன் யானைக்குத் தீங்கு செய்து, தீமை அடைந்தான்.

3. ஒரு வாக்கியம் ஆக்கு :—

(i) யானை ஆவலோடு வந்தது. அது தையற்காரன் கொடுத்த பழத்தை வாங்கிற்று. அது அதனை வாயில் இட்டுக்கொண்டது.

(ii) யானை குட்டையை அடைந்தது. நீரில் இறங்கி ஆடிற்று. பாகனோடு திரும்பி வந்தது.

(iii) யானை மரக்கிளைகளை முறித்தது. அது அவற்றைத் தந்தத்தின் மேல் வைத்துக்கொண்டது.

(iv) தையற்காரன் துணியைக் கத்தரித்தான். அவன் அதைச் சட்டையாகத் தைத்தான்.

20. தோட்டம்–I

அடிக்கடி—என்னென்ன — விளக்கமாக — பயிராகின்றன — காட்டாறு—இறைத்து — பாய்ச்சப்படுகின்றது — கபிலேயேற்றம்— ஆள் ஏற்றம்—அரைவட்டம்—எலிமெண்டரி பாடசாலை—சமசதுரம்— ஊற்றுகிறோம்— நுழைவதற்கு—மூங்கிலினுல்—படரவிட்டு — வெட்டப் பட்டு—நல்வரவு — பறிப்பதும் — பட்டுப் போவது—உத்தியோகஸ் தர்—தொல்லே—விவசாய இலாகா—தடுக்கும் வழியை—ஆசிரியர்— கற்பித்திருக்கிருர்.

நாகன் :—முத்து, நீ, அடிக்கடி உங்கள் தோட்டத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிருயே, அங்கு அப்படி என்ன விசேஷமாக இருக்கின்றன ?

முத்து :—எங்கள் தோட்டத்தில் பலவகைப் பழ மரங்கள் இருக்கின் றன ; பலவகைப் பூஞ் செடிகளும் இருக்கின் றன ; மஞ்சள், கத்திரி, வெண்டை, மிளகாய் முதலிய செடிகளும் பயிராகின்றன.

நாகன் :— நீங்கள் அம்மரம் செடிகட் கெல்லாம் எங்கிருந்து தண்ணீர் பாய்ச்சு கிறீர்கள் ?

முத்து:—நாங்கள் தண்ணீரைக் கிணற்றி லிருந்து ஏற்றத்தால் இறைத்துப் பாய்ச்சுகிருேம்.

நாகன் :—ஆள் ஏற்றமா ? கபிலே ஏற்றமா ?

முத்து :—கபிலை ஏற்றமே. எங்கள் தோட்டத்திலேயே இரண்டு கிணறுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் இரண்டு கபிலை ஏற்றங்கள் இருக்கின்றன.

நாகன் :—சரிதான்; நீ எப்பொழுதும் உங்கள் வீட்டுத் தோட்டத்தைப் பற்றியே பேசுகிறாயே, உங்கள் பள்ளிக்கூடத்தில் தோட்டம் இல்லையா? நாங்கள் எங்கள் பள்ளிக்கூடத்தில் ஓர் அழகான தோட்டம் வைத்திருக்கிறோம்.

முத்து :—எங்கள் பாடசாலைக்காக எங்கள் தகப்பனார் சிறிது அளவு இடம் கொடுத்து இருக்கிறார். அதை நாங்கள் நன்றாய் அலங்கரித்து இருக்கிறோம். நீ வந்து அதைப் பார். நேராகப் பார்த்தால்தான் உனக்கு அதன் அழகு தெரியும்.

நாகன் :—தோட்டத்தை 'அலங்கரித்து இருக்



கிறோம்' என்றால் எனக்கு விளங்கவில்லையே? பிள்ளைகள் தினமும் அங்குச் சென்று என்ன செய்வார்கள்?

முத்து :—நான் சொல்லுகிறேன், கேள்: நாங்கள் ஓர் இடத்தில் அரைவட்டம் போட்டுப் பெரிய எழுத்துகளால் 'போர்டு எலிமெண்டரி பாடசாலை' என்று எழுதி இருக்கிறோம் ; அதன் மேல் அரைக் கீரையை நட்டு இருக்கிறோம் ; அரைவட்டத்தின் ஒரு பக்கத்தில் ஒரு நீண்ட சதுரமும் மற்றொரு பக்கத்தில் ஒரு சம சதுரமும் போட்டு, அவற்றின் மேலும் கீரையை நட்டு இருக்கிறோம் ; நடுவில் பூஞ்செடிகளை வைத்து வளர்த்து வருகிறோம்.

நாகன் :—எங்கள் பாடசாலையில் இவை எல்லாம் இல்லை ; மல்லிகைச் செடிகளும் ரோஜாச்செடிகளுமே இருக்கின்றன. நாங்கள் தினமும் அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றுகிறோம்.

முத்து :—இங்கும் அந்தப் புஷ்பச் செடிகள் இருக்கின்றன. தோட்டத்திற்குள் நுழையும் முன்பே மூங்கிலினால் ஒரு வளைவுப் பந்தல் போட்டு, நாங்கள் அதன்மேல் சம்பங்கிக் கொடியைப் படரவிட்டு இருக்கிறோம். உள்ளே நுழையும் பொழுதே 'நல்வரவு' என்று எழுத்துகள் வெட்டப்பட்டு, அந்த வளைவில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. நாங்கள், சிலசமயங்களில் எங்கள் கத்திரித் தோட்டத்திற்கும் போவது உண்டு. நாங்கள் அங்குள்ள செடிகளுக்குக் களை பறிப்பதும், தண்ணீர் பாய்ச்சுவதும் வழக்கம்.

நாகன் :—நாங்கள் எங்கள் தோட்டத்தில் பாகல் செடி பயிர் செய்தோம். அதில் மஞ்சள் நிறமான ஒரு பூச்சி வந்து இலைகளை எல்லாம் தின்று விட்டது. உங்கள் தோட்டத்தில் அத்தகைய பூச்சிகள் வருவது உண்டா?

முத்து :—பயிர் வகைகளைக் கவனிக்க விவசாய இலாகா உத்தியோகஸ்தர் ஒருவர் இருக்கிறார். அவர் பூச்சிகளைத் தடுக்கும் வழியைச் சொல்லுவார். எங்கள் தொட்டத்திலும் பூச்சிகளின் தோல்லை இருந்தது. நாங்கள் அந்த உத்தியோகஸ்தர் கொடுத்த மருந்தைப் போட்டோம்; பூச்சிகளின் தொல்லை நின்றது.

நாகன் :—உங்கள் தோட்டத்தில் பழ மரங்கள் இருக்கின்றன என்று சொன்னாய் அல்லவா? அங்கு இப்பொழுது என்ன பழம் கிடைக்கும்? நாம் அங்கு மாலையில் போகலாமா?

முத்து :—நாம் மாலையில் போகலாம். இப்பொழுது வசந்த காலம் அல்லவா? நல்ல மாங்கனிகள் கிடைக்கும்.

நாகன் :—இப்பொழுது மாங்கனிகள் தாம் இருக்கின்றனவா? வேறு கனிகள் இல்லாமைக்குக் காரணம் என்ன?

முத்து :—எல்லா மரங்களும் ஒரே காலத்தில் பழுக்குமா? ஒவ்வொன்று ஒவ்வொரு காலத்தில் தான் பழுக்கும். ஒவ்வொன்றுக்கும் ஒரு காலம் இருக்கிறதல்லவா? கார் காலத்தில் மாம்பழம் வேண்டும் என்றால் எப்படிக் கிடைக்கும்?

நாகன் :—இக்காலங்கள் எல்லாம் உனக்கு நன்றாய்த் தெரியுமா? உங்கள் ஆசிரியர் கற்பித்திருக்கிறாரா?

முத்து :—ஆம், எங்கள் ஆசிரியர் கற்பித்து இருக்கிறார். நான் நாளை அவற்றை உனக்குச் சொல்லுவேன்.

21. பழமொழிகள்

கல்வி

1. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
2. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. காலை மாலை நூலை ஓது.
4. கல்வியே கருந்தனம்.

செல்வம்

1. பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே.
2. காசு இல்லாதவன் தூசு பெறமாட்டான்.
3. ஈட்டி எட்டிய மட்டும் பாயும்;
   பணம் பாதாளம் மட்டும் பாயும்.
4. காணி காணியாய்ச் சேர்த்தால் கோடியாகும்.

பயிர்த் தொழில்

1. அகல உழுவதில் ஆழ உழுதல் நல்லது.
2. ஆடிப் பட்டம் தேடி விதை.
3. இளைத்தவன் எள்ளை விதைப்பான்;
   கொழுத்தவன் கொள்ளை விதைப்பான்.
4. ஓதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில்.
5. பாராத பயிரும் கேளாத கடனும் பாழ்.

பொது

1. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
2. கெட்டிக்காரன் புளுகு
   எட்டுநாளில் வெளியாகும்.
3. பாலுக்கும் காவல் பூனைக்குந் தோழன்.
4. கிட்டி வைத்துக் கட்டினாலும்
   ஒட்டாச்சுவர் ஒட்டாது.

5. மலையைப் பார்த்து நாய் குரைத்தால்,
மலைக்குச் சேதமா? நாய்க்குச் சேதமா?

பயிற்சி

1. உனக்குத் தெரிந்த வேறு சில பழமொழிகள் சொல்.
2. உன் தாயாரைக் கேட்டு 4 பழமொழிகள் தெரிந்து வா.
3. உன் தகப்பனாரைக் கேட்டு 4 பழமொழிகள் தெரிந்துவா.
4. உங்கள் பாடநூலுள் வரும் பழமொழிகளைத் தொகுத்துப்படி.

22. தோட்டம்—II

இளவேனில் — முதுவேனில்— உஷ்ணம்—வசந்த காலம்—காற்றும் மழையும்—கார்காலம்—முன்பனிக் காலம்—பின்பனிக்காலம்—குளிர் காலம்—சீதம்—விடுமுறை—காலத்திற்கேற்ற—கடுமையாக.

நாகன்:—முத்து, காலங்களையும் அவற்றில் பழுக்கும் பழங்களையும் பற்றி இப்போது சொல்லுகிறாயா?

முத்து:—சொல்லுகிறேன் கேள். சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலம். அப்பொழுது காலையிலேயே வெயில் கடுமையாக இருக்கும். ஆனியும் ஆடியும் முதுவேனிற் காலம். அப்பொழுது உச்சி நேரத்திற்குப் பிறகு உஷ்ணம் கடுமையாக இருக்கும். வேனிற் காலத்தை 'வசந்த காலம்' என்றும் சொல்லுவது உண்டு.

நாகன்:—ஆடி மாதத்தில் காற்று அதிகமல்லவா?

முத்து:—வெயில் அதிகமானால் காற்றும் மழையும் அதிகம் ஆகின்றன. உனக்கு இது தெரியாதா?

நாகன்:—ஆவணியும் புரட்டாசியும் மழைக் காலமா?

முத்து:—ஆம். அது கார் காலம் எனப்படும்.

'கார்' என்ருல் 'மேகம்'. மேகம் மழை பெய்யும் காலம் ஆதலால் அதற்குக் கார் காலம் என்பது பெயர் ஆயிற்று.

நாகன்:—ஐப்பசியிலும் கார்த்திகையிலும் குளிர் அதிகம் அல்லவா? இப்போது மேலே ஆடை கூடப் போட்டுக் கொள்ளாமல் இருக்கிருேமே, அந்த மாதங்களில் போர்வை இல்லாமல் இருக்க முடியுமோ?

முத்து:—முடியாது, முடியாது. வீட்டுக்குள் இருந்தாலும் போர்வை போர்த்துக்கொண்டுதான் இருக்க முடியும். அதனுல் தான் அந்த மாதங்களுக்குக் குளிர் காலம் என்பது பெயர். மார்கழியும் தையும் முன் பனிக்காலம். அக்காலத்தில் சூரியன் மறைந்தவுடன் பனி அதிகமாக இருக்கும்; அதாவது முன் இரவில் பனி பெய்யும். நாம் அப்பொழுது வெளியில் திரியலாகாது.

நாகன்:—காலம் என்பது இரண்டு இரண்டு மாதங்கள் சேர்ந்ததோ?

முத்து:—ஆமாம். நம் முன்னேர்கள் சீதம் (குளிர்), உஷ்ணம் இவற்றின் நிலேகளே அறிந்து, காலத்தை இப்படிப் பிரித்திருக்கிருர்கள்.

நாகன்:—இப்பொழுது ஆறு காலங்கள் சொன்னுய்; ஒவ்வொரு காலத்திற்கும் இரண்டு இரண்டு மாதங்களாக, ஒரு வருஷத்திற்குப் பன்னிரண்டு மாதங்கள் ஆயின. நீ, காலத்திற்கு ஏற்ற பழங்கள் உண்டு என்று சொன்னுய் அல்லவா? ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு பழம் சொல், பார்ப்போம்.

முத்து:—

காலம்	பழம்
இளவேனிற் காலம்	மாம்பழம்
முதுவேனிற் காலம்	மாதுளம் பழம்
கார் காலம்	விளாம் பழம்
குளிர் காலம்	கிச்சிலிப் பழம்
முன்பனிக் காலம்	வாழைப்பழம்
பின்பனிக் காலம்	திராக்ஷைப் பழம்

நாகன்:—நாம் இன்று மாலை நிச்சயமாக உங்கள் தோட்டத்திற்குப் போக வேண்டும். நீ என்னை அழைத்துச் செல்லுவாயா?

முத்து:—எனக்கு இன்று விடுமுறை நாள். ஆதலால் நான் உன்னை அழைத்துச் செல்வேன்; தோட்டம் முழுவதையும் உனக்குக் காட்டுவேன்.

கேள்விகள்

1. தோட்டங்களில் பூச்சிகள் தொல்லை உண்டாகாதவாறு தடுக்க என்ன செய்ய வேண்டும்?
2. மாங்கனி எந்தக் காலத்தில் மிகுதியாகக் கிடைக்கும்?
3. மாதங்களின் தமிழ்ப் பெயர்களை முறையாகக் கூறுக.
4. ஒரு வருஷத்திற்கு எத்தனைக் காலங்கள்?

பயிற்சி

1. அடியில் கொடுக்கப்படும் பெயர்ச் சொற்களுக்குத் தகுந்த வினைச் சொற்களை அமைத்து எழுதுக:—(1) பூஞ்செடிகள்———. (2) காட்டாறு ———. (3) ஒரு தோட்டம் ———. (4) தண்ணீர் ———. (5) பூச்சிகள் தொல்லை ———.

2. தனித்தனி வாக்கியங்களில் அமைக்க:—நிச்சயமாக, விடுமுறை நாள், உச்சி நேரம், பழ மரங்கள், தொல்லை.

3. அடியில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக:—எங்கள் பாடசாலையில் உள்ள மல்லி

கைச் செடிகளுக்கும் ரோஜாச் செடிகளுக்கும் நாங்கள் தினமும் தண்ணீர் ஊற்றுகிறோம்.

4. தடித்த எழுத்தில் உள்ளவவை என்ன என்ன சொற்கள்?—(1) ஒட்டன் ஓடு மாற்றுகிறான். (2) நீ வேகமாக ஓடு. (3) அங்கு மேய்வது ஆடு. (4) நீ இராமனோடு கூடி ஆடு.

23. புத்திமதிகள்

தொழு—இறங்காதே—குரு பக்தி—கேவலம்-கெட்டவர்களோடு—கூழாயினும்—கை கூப்பி—இகழாதே — கொடையாளியாய் — கௌரியை.

கடவுளைத் தொழு.	க (க் + அ = க)
காலையில் எழுந்திரு.	கா (க் + ஆ = கா)
கிணற்றில் இறங்காதே.	கி (க் + இ = கி)
கீர்த்தி பெற வாழ்.	கீ (க் + ஈ = கீ)
குருபக்தி கொண்டிரு.	கு (க் + உ = கு)
கூழாயினும் குளித்துக் குடி.	கூ (க் + ஊ = கூ)
கெட்டவர்களோடு சேராதே.	கெ (க் + எ = கெ)
கேட்டை நினையாதே.	கே (க் + ஏ = கே)
கை கூப்பி வணங்கு.	கை (க் + ஐ = கை)
கொடையாளியாய் இரு.	கொ (க் + ஒ = கொ)
கோபம் பாபம் விளைக்கும்.	கோ (க் + ஓ = கோ)
கௌரியைத் தொழு.	கௌ (க் + ஔ = கௌ)

பயிற்சி

1. க முதல் கௌ வரையில் உள்ள எழுத்துகளை அமைத்து ஒவ்வொரு வார்த்தை எழுது.

2. ச முதல் சௌ வரையில் உள்ள ஒவ்வோர் எழுத்தும் அமைந்து உள்ள வார்த்தைகளை முன் பாடங்களிலிருந்து பொருக்கி எழுது.

3. பொருள் கூறு :—தொழு, இகழாதே, கொடை, கீர்த்தி.

4. வித்தியாசம் கூறு :—இறங்காதே, இரங்காதே; இறந்தாலும், இரந்தாலும் ; பறி, பரி.

5. எதிர்மொழி கூறு :—ஏறு, இகழ், வலம், உஷ்ணம், தண்ணீர், கிழ முயல்.

6 .**ஆ**=பசு, **கை**=ஓர் உறுப்பு, **கோ**=அரசன்.-இப்படி **ஓர் எழுத்து** ஒரு பொருளைக் குறித்தால், **சொல்** (பதம்)எனப்படும். இஃது **ஓர் எழுத்துச் சொல்** என்றும் சொல்லப்படும்.

இம்மாதிரியான ஓர் எழுத்துச் சொற்களை இப்பாடங்களிலிருந்து எடுத்துக் கூறு.

24. கடை வீதி

பாவாடையும்--மேலாக்கும்-- வெவ்வேறு--திராசை--கெஜம்--கெஜக்கோல்--சாமான்களை--சீட்டு--ஜோடி.

(கமலமும் இரத்தினமும் தகப்பனுருடன் கடைக்குப் போகிறார்கள்)

கமலம்:—அப்பா ! எனக்கு நல்ல பாவாடையும் மேலாக்கும் வேண்டும் ; வாங்கிக் கொடுங்கள்.

இரத்தினம்:—அப்பா ! வீட்டில் பருப்பு இல்லையாம் ; சர்க்கரையும் வேண்டுமாம்.

தகப்பனார்:—இன்னும் என்னென்ன சாமான்கள் வேண்டும் என்று அம்மாவைக் கேட்டுக்கொண்டு வா.

கமலம்:—அம்மா ஒரு சீட்டுக் கொடுத்திருக்கிறார். அவரே வீட்டுக்கு வேண்டும் சாமான்கள் எல்லாம் அச்சீட்டில் விவரமாய் எழுதி இருக்கிறார்.

தகப்பனார்:—நாம் வாங்கவேண்டும் சாமான்களின் பெயர்கள் எல்லாம் அச்சீட்டில் இருக்கின்றனவா ? வாசி, பார்ப்போம்.

இரத்தினம்:—துவரம் பருப்பு—4 படி, சர்க்கரை—1 வீசை, மிளகு—1 வீசை, பெருங்காயம்—1 பலம், வாழைப் பழம்—1 டஜன், வெற்றிலை—1 கவுளி, சீட்

டித் துணி—5 கெஜம், புடவை—1 ஜோடி, ஜிலேபி —1 சேர்.

தகப்பனர்:—இரத்தினம்! அம்மா எல்லாம் எழுதியிருக்கிருள். கடைக்குப் போகலாம் வா. கமலமும் நம்மோடு வரட்டும்.

கமலம்:—அப்பா! இவை எல்லாம் ஒரே கடையில் கிடைக்குமா? வெவ்வேறு கடைகளில் வாங்க வேண்டுமா?

தகப்பனர்:—ஒரே கடையில் கிடைக்குமா? வேறு வேறு கடையில் கிடைக்குமா? என்பது இரத்தினத்திற்குத் தெரியும். அவன் அடிக்கடி கடைக்குப் போகிருன் அல்லவோ?

இரத்தினம்:—ஜிலேபி, மிட்டாய்க் கடையில் கிடைக்கும். புடவையும், பாவாடைத் துணியும் ஜவுளிக் கடையில் வாங்கலாம். பழக் கடையில் வாழைப்பழம் கிடைக்கும். மற்றச் சாமான்கள் மளிகைக் கடையிலேயே இருக்கும்.

தகப்பனர்:—இரத்தினம்! செட்டியாரிடம் சீட்டைக் கொடு. செட்டியாரே! சாமான்களைப் பார்த்துச் சரியாகக் கொடும்.

கமலம்:—அப்பா! அந்தப் பையன் அளக்கிருனே, அது என்ன?

தகப்பனர்:—ஆம், அதுதான் படி. அதைவிடச் சிறியது அரைப்படி.

இரத்தினம்:—கமலம்! சர்க்கரையை நிறுப்பதைப் பார். திராசு நிறுக்கப் பயன்படும். அதன் இரண்டு தட்டுகளில் ஒன்றில் எடைக்கல் இருக்கிறது; மற்றென்றில் சர்க்கரை இருக்கிறது.

கமலம்:—அண்ணு! நான் இதுவரை திராசைப் பார்த்ததே இல்லை. வாழைப் பழத்தையும் நிறுத்துத்தான் கொடுப்பார்களோ?

தகப்பனுர்:—வாழைப் பழத்தை நிறுப்பதில்லை. அதை, 'ஒன்று—இரண்டு' என்று எண்ணிக் கொடுப்பார்கள்; ஒரு டஜனுக்கு விலை கூறுவார்கள். ஒரு டஜனுக்குப் பன்னிரண்டு பொருள்கள்.

தகப்பனுர்:—வாருங்கள், ஜவுளிக் கடைக்குப் போவோம்.

தகப்பனுர்:—ஐயா, கடைக்காரரே! இந்தச்சீட்டி கெஜம் என்ன விலை?

கடைக்காரர்:—இதன் விலை நான்கரை அணு.

தகப்பனுர்:—ஐந்து கெஜம் சீட்டி கொடுங்கள்.

கமலம்:—அப்பா! அவர் துணியை இரும்புக் கழியால் அளக்கிருரே?

இரத்தினம்:—அதுதான் கெஜக் கோல். மூன்று அடி கொண்டது ஒரு கெஜம். ஓர் அடிக்குப் பன்னிரண்டு அங்குலங்கள்.

கமலம்:—இது எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இதைப்பார்த்ததே இல்லை. அப்பா தம் கையினுல் முழம் போடுவதைத் தான் நான் பார்த்து இருக்கிறேன்.

இரத்தினம்:—இரண்டு முழம் ஒரு கெஜம். கெஜக் கோல் இல்லாதவர்கள் முழம் போடுவார்கள். அப்பா! கடைக்காரருக்குப் பணம் கொடுத்தாய் விட்டதா?

தகப்பனுர்:—கொடுக்க வேண்டும். மொத்தம் எவ்வளஃவு ஆயிற்று? கணக்குப் பார்த்துச் சொல்.

இரத்தினம்:—ஒரு கெஜம் சீட்டி நான்கரை அணு. ஐந்து கெஜத்திற்கு, ஐந்து கால் ஒன்றே கால்; ஐந்து அரை இரண்டரை; ஆக, மொத்தம் ஒரு ரூபாய் ஆறரை அணு ஆயிற்று.

தகப்பனுர்:—சரி, போகலாம் வாருங்கள்.

(எல்லோரும் வீட்டிற்குப் போகிருர்கள்.)

கேள்விகள்

1. சர்க்கரை, வாழைப்பழம், உப்பு, சட்டைத்துணி—இவற்றை எவ்வெவ்வாறு அளந்து கொடுப்பார்கள்?

2. திராக்ஷை, பாவாடைச் சீட்டி, நோட்டுப் புத்தகம், மிளகாய், லட்டு, மோதிரம்—இவைகள் எந்த எந்தக் கடையில் கிடைக்கும்?

3. பருப்பு, பாக்கு, சேலை—இவற்றை எந்த எந்தக் கருவியால் அளப்பார்கள்?

4. சுவையும் நிறமும் கூறுக:—பாக்கு, உப்பு, மிளகாய், எலுமிச்சம்பழம்.

5. ஒரு ரூபாய்க்கு ஆறரைப்படி அரிசியானல், ஒன்றரைப்படி அரிசியின் விலை என்ன?

6. ஒரு வீசை சர்க்கரை ஆறணு; பத்துப் பலம் சர்க்கரையின் விலை என்ன?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க:—(1) ஒரு——புளி—கொடு. (2) ஆறு —— அரிசி —— போடு. (3) மூன்று —— சட்டைத் துணி கிழித்துக் கொடு. (4) ஒரு —— வாழைப்பழத்தின் —— என்ன? (5) பெருங்காயம் ஐந்து —— வாங்கி வா. (6) ஜிலேபி மூன்று —— ——க் கொடு.

2. ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுதுக:—(1) வீட்டில் பருப்பு இல்லை; சர்க்கரை இல்லை; அரிசியும் இல்லை. (2) கற்பூரம் மளிகைக் கடையில் கிடைக்கும்; பாவாடைச் சீட்டி ஜவுளிக் கடையில் இருக்கும். (3) பாக்கு ஒரு வீசை கொடு; மிளகு ஐந்து பலம் கொடு; உப்பு இரண்டு படி கொடு. (4) எனக்குப் பசி அதிகமாகிறது; தாகம் மிகுகிறது. (5) கடைக்குச் செல்; விலை கேள்; நல்ல பழமாகப் பார்த்து வாங்கி வா.

3. தடித்த வார்த்தைகள் யார் யாரைக் குறிக்கின்றன என்பதைக் கண்டு எழுதுக:—(1) **அவன்** அடிக்கடி கடைக்குப் போகிறான் அல்லவோ? (2) **நீங்கள்** கேட்கும் சாமான்களின் பெயர்கள் அச்சீட்டில் இருக்கின்றனவா? (3) **நான்** இதுவரையில் திராசைப் பார்த்ததே இல்லை. (4) **அவர்** துணியை இரும்புக் கழியால் அளக்கிறாரே! (5) நான் **இதைப்** பார்த்ததே இல்லை.

4. இதில் உள்ள ஓர் எழுத்துச் சொற்களைக் கூறுக.

5. அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

6. கிளி, மாடு, கோ—இவை இரண்டு எழுத்துகளால் ஆன சொற்கள்.

அறம், வரம், படம்—இவை மூன்று எழுத்துகளால் ஆன சொற்கள்.

பட்டம், கட்டம்—இவை நான்கு எழுத்துகளால் ஆன சொற்கள்.

கதம்பம், பம்பரம்—இவை ஐந்து எழுத்துகளால் ஆன சொற்கள்.

25. தினசரி வேலை

1. காலை எழுந்திருக்க வேண்டும்—அன்பாய்க்
கடவுள் அடிதுதிக்க வேண்டும்
பாலெனப் பல்துலக்க வேண்டும்—புதுப்
பாடம் பலபடிக்க வேண்டும்.

2. ஆடை களைத்துவைத்துக் கொண்டு—அழுக்கு
அகலத் தலைமுழுக வேண்டும்
நாடி உரியகுறி நன்றாய்—நெற்றி
நலம்பெற வேதரிக்க வேண்டும்.

3. ஆத்திரம் இன்றிமெது வாக—உணவை
அளவாய் அறிந்துஉண்ண வேண்டும்
நேர்த்தி யாய்உடுத்துக் கொண்டு—குறித்த
நேரத்தில் பள்ளிசெல்ல வேண்டும்.

4. குருவை வணங்கிநிற்க வேண்டும்—அவர்
குறிப்பின் வழிநடக்க வேண்டும்
மருவி அமைதியாய் இடத்தில்—இருந்து
வணங்கிப் பாடம்கேட்க வேண்டும்.

5. தீய பிள்ளைக ளுடன்கூட—என்றும்
சேர லாகாதுதீமை சேரும்
தூய மனத்துடனே மாலை—வெளியில்
துள்ளி யாடினல்நலம் சாரும்.

6. கண்ணுக் கிருட்டுவதன் முன்னே—நீ
கடுகி வீடடையவேண்டும்
பண்ணுக் கினியதுதி பாடி—கடவுளைப்
பக்தி யுடன்பரவ வேண்டும்.

7. உண்டு ஓய்வுசிறிது கொண்டு—பின்பு
உரிய பாடம்படிக்க வேண்டும்
தொண்டை கிழியப் படிக்காதே—வாய்விட்டுத்
தோன்றும லும்முணுக் காதே.

8. அதிக நேரம் விழிக்காதே—நன்கு
அமையா இடத்தில் படுக்காதே—தெய்வத்
துதிகள் பாடிப்படுத் துறங்கு—பல
சுகங்களும் சாரும்உனை ஒருங்கு.

—வித்வான், ம. வி. இராகவன்

26. எழுதும் முறை

ஒளவையார்—தரும்—நிமிர்ந்து—ஆடாமல் அசையாமல்—கெட்டியாய்—மார்ஜின்—இடையில்—நிறுத்தக் குறிகள்—போகப் போக—குறைந்துகொண்டே—வித்தியாசப்பட—கோத்து வைத்த மாதிரி—முடிபு—பகுதி—சாய்த்தும்—கோணலாகவும்—தற்காலம்— பிழை—அவயவங்களின்—குன்றுகின்றது.

எழுத்து, கண்ணுக்குச் சமானம் ஆனது. "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்று ஒளவையார் கூறி இருக்கிறார்.

பிள்ளைகளே! நீங்கள் பாடங்களைக் கரும்பலகையிலோ கடிதத்திலோ எழுதி வருகிறீர்கள். அப்படி எழுதும் பொழுது நீங்கள் சில முறைகளைக் கவனிக்க வேண்டும். அவற்றைச் சொல்லுகிறேன், கேளுங்கள்:

நீங்கள் எப்பொழுதும் நிமிர்ந்து உட்கார்ந்தே எழுதிப் பழக வேண்டும்; கரும்பலகை (சிலேட்), நோட்டுப் புத்தகம் இவற்றை ஆடாமலும் அசையாமலும் உறுதியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்; முகத்திலிருந்து ஒன்றரை அடி தூரத்தில் அவற்றை வைத்துக் கொள்ள வேண்டும்; சிறிய சாய்வு மேஜைகளின்மீது வைத்துக்கொண்டு எழுதுவது நலம். நீங்கள் பலப்பம், பென்ஸில், பேனா இவற்றை நடுவிரலின் மேல் வைத்துக் கட்டை விரல், சுட்டு விரல் இவ்விரண்டாலும் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ள வேண்டும்; எழுதும் இடத்திலிருந்து பிடிக்கும் இடம் சுமார் ஒன்றரை அங்குலத்திற்கு மேல் இருக்கலாம்; ஓர் எழுத்து எழுதுகிற போது நடுவில் பேனாவை எடுத்து எடுத்து எழுதக் கூடாது.

நாம் இடப் பக்கத்திலிருந்து வலப் பக்கமாக எழுதுகிறோம் அல்லவா? அப்படி எழுதும் போது,

சிலேட்டிலோ நோட்டுப் புத்தகத்திலோ இடது ஓரத்தில் சிறிது இடம் விடவேண்டும். அப்படி விடும் இடத்திற்கு ஓரம் விடுதல் (மார்ஜின்) என்பது பெயர். நீங்கள், ஓர் எழுத்திற்கும் மற்றோர் எழுத்திற்கும் நடுவில் சிறிது இடம் விடவேண்டும்; ஒரு வார்த்தைக்கும் மற்றொரு வார்த்தைக்கும் இடையில் சிறிது அதிக அளவு இடம் விடவேண்டும்; ஒவ்வொரு பகுதி (பாரா) முடிந்ததும், வேறு பகுதிக்குத் தனி வரி ஆரம்பிக்க வேண்டும்; இரண்டு பகுதிகளுக்கும் மத்தியில் இடம் விடுதல் முறை; நிறுத்தக் குறிகள் இடவேண்டும் இடங்களை அறிந்து, அவ்விடங்களில் அவற்றை இடவேண்டும்.

நீங்கள், மேல் வகுப்புக்குப் போகப் போக எழுத்தின் அளவைக் குறைத்துக்கொண்டே போக வேண்டும்; அத்துடன் வேகமாக எழுதவும் பழக வேண்டும்; முதல் வகுப்பில் பெரியதாகவும் இரண்டாம் வகுப்பில் சிறிது சிறியதாகவும், மூன்றும் வகுப்பில் அதைவிடச் சிறியதாகவும் எழுதுவதே சிறந்த முறை. கண்ணுக்குத் தெரியாதவாறு மிகச் சிறியதாகவும் எழுதலாகாது. எழுத்துகள் அளவில் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசப்படுதல் ஆகாது. ஒரே அளவுள்ள மணிகளைக் கோத்து வைத்த மாதிரி எழுத்துகள் ஒரே அளவாக இருக்க வேண்டும். நீங்கள், ஒவ்வோர் எழுத்தின் ஆரம்பம், முடிவு, அழுத்த வேண்டும் இடம், அழுத்தக் கூடாத இடம் இவற்றைக் கவனித்து எழுத வேண்டும்; நேர்க்கோடு, வளைந்த கோடு இவற்றை நன்றாக எழுத வேண்டும்; அதிகமாகச் சாய்த்தும் கோணலாகவும் எழுதக்கூடாது.

நீங்கள், கீழே படுத்துக் கொண்டும், பல்லைக் கடித்துக்கொண்டும், நாக்கை நீட்டிக்கொண்டும் எழுதலாகாது. எல்லா இடங்களிலும் அழுத்தி எழுதுவதால் எழுத்துகளின் அழகு குறைகிறது; அவயவங்களின் பயிற்சியும் குன்றுகிறது.

கேள்விகள்

1. நாம் எவ்வாறு உட்கார்ந்து எழுத வேண்டும்?

2. சிலேட், நோட்டுப் புத்தகம் இவற்றை முகத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்?

3. எழுத்துகளின் அழகு குறைவதும் அவயவங்களின் பயிற்சி குன்றுவதும் எதனுல்?

4. எழுதும் பொழுது அநுசரிக்க வேண்டும் முக்கியமான முறைகள் யாவை?

பயிற்சி

1. சமம், கவனிக்க, கெட்டியாக, விடுதல், போகப் போக, குறைந்துகொண்டே, கோத்து வைத்த மாதிரி, அதிகமாக, கோணலாகவும்—இவற்றிலிருந்து, கீழே கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமானவற்றைப் பொருக்கி, அவ்வவ்விடங்களில் அமைக்க :—(1) நோட்டுப் புத்தகத்தை ஆடாமல் அசையாமல் ——— பிடித்துக்கொள்ள வேண்டும். (2) ஒரே அளவுள்ள மணிகளை ——— எழுத்துகள் ஒரே அளவாக இருக்கவேண்டும். (3) ——— சாய்த்தும் ——— எழுதக் கூடாது. (4) சில முறைகளை ——— வேண்டும். (5) எழுத்து, கண்ணுக்கு ——— ஆனது. (6) இடம் ——— முறை. (7) வகுப்பு ——— எழுத்தின் அளவு ——— போக வேண்டும்.

2. பொருள் கூறுக :—பிழை, சமம், ஆரம்பம், குன்றுகிறது.

3. எதிர் மொழி கூறுக :—நிமிர், கெட்டி, நேர், நல்ல, ஆரம்பம்.

4. தடித்தவை என்ன என்ன சொற்கள்?— ஒன்றரை **அடி** தூரம். பிரம்பால் ஓர் **அடி அடி**. குருவிக் **கூடு**. நல்லோரைக் **கூடு**. மனக் **குறை**. ஐந்தில் மூன்றைக் **குறை**.

5. இப்பாடத்தில் உள்ள மூவெழுத்துச் சொற்களைக் கூறு.

6. ஓர் எழுத்துச் சொற்களை எழுது.

7. ஈரெழுத்துச் சொற்களை எண்ணிச் சொல்.

27. போலீஸ்காரர்

இராஜாங்கத்தாரால் — நியமிக்கப்பட்டவர் — கருங்காவி— அணிவதும் — கடமை — உபகாரம் — கஷ்டமில்லாமல் — வழி காட்டிகளாக — கலகம் — காக்கிருர்கள் — அடக்குவார்கள்—பாது காத்து — புலன் விசாரித்து — துணை—ஜெயில்—கஜானு—பாரா— பூட்ஸ் — பெல்ட்டு — ஊதுகுழல் —குறுந்தடி—தொப்பி.

இந்தப் படத்தைப் பார்: இது போலீஸ் காரர் படம். இவர் இராஜாங்கத்தாரால் நியமிக்கப் பட்ட ஒரு சிறிய உத்தியோகஸ்தர். இவருடைய உடையைக் கவனி. தலை யில் ஒரு சிவப்புத் தொப்பி இருக்கி றது. அதில் எழுத்தும் எண்ணும் போட்டு இருக்கின்றன, பார். மற்ற உடுப்புகள் வெண்மையாக இருக்கின் றன. இவர் சில சமயங்களில் கருங் காவி நிறம் உள்ள உடுப்புகளும் அணிவது உண்டு. இவருடைய இடுப்பில் ஒரு தோல் பெல்ட்டும், சட் டைப் பையில் ஒரு நோட்டுப் புத்தக மும், ஓர் ஊது குழலும் இருக்கின் றன. பெல்ட்டில் ஒரு குறுந் தடி தொங்குகிறது. இவர் கால்களில் தோல் உறை (பூட்ஸ்) போட்டுக் கொண்டு இருக்கிருர்; மேல் காலில் ஒரு கம்பளிப் பட்டையைச் சுற்றிக்கொண்டு இருக்கிருர்.



போலீஸ்காரர்களுடைய கடமை என்ன? அது ஜனங்களுக்கு ஆபத்து நேராமல் பாதுகாப்பதே ஆகும். ஜனங்களுக்கு உதவி செய்வதற்காகவே

அரசாங்கத்தார், இவர்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவர்கள், சாலைகளில் செல்பவர் கஷ்டம் இல்லாமல் போவதற்கு வழிகாட்டிகளாக இருக்கிறார்கள்; வழி தப்பிப் போன பிள்ளைகளையும் முதியோர்களையும் காத்து, அவர் அவர்களுடைய வீடுகளில் கொண்டு சேர்க்கிறார்கள்; கலகம், சண்டை, சச்சரவு முதலிய குற்றங்கள் நடவாமல் காக்கிறார்கள்; எங்கேனும் அவை நடந்தால், அங்குச் சென்று அவற்றை அடக்குவார்கள்; கொலை, களவு, முதலிய தீங்குகள் நடவாதபடி பாதுகாத்து வருகிறார்கள்; அவை நடந்தால், புலன் விசாரித்துச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பார்கள்; குற்றவாளிகளை விசாரணை மேடைக்குக் கொண்டு செல்வதும் இவர்கள் வேலை ஆகும். கஜானவிலும், ஜெயிலிலும் பாரா இருப்பதும் இவர்கள் கடைமை ஆகும். ஜனங்கள் வீதிகளில் அசுத்தம் செய்யாமல் பார்த்துக்கொள்வதும் இவர்கள் வேலை ஆகும்.

கேள்விகள்

1. போலீஸ்காரர் தலையில் என்ன இருக்கிறது? அதில் என்ன என்ன போட்டிருக்கின்றன?

2. போலீஸ்காரர் போட்டுக்கொள்ளும் உடுப்புகள் எவை?

3. அவர் என்ன என்ன வைத்துக்கொண்டிருக்கிறார்? ஏன்?

4. போலீஸ்காரருடைய முக்கியமான அலுவல்கள் யாவை?

பயிற்சி

1. சட்டைப்பை, குறுந்தடி, பாதுகாப்பதே, நடவாதபடி, விசாரணை— இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இரண்டு சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக:—(1) இவர் இராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒரு சிறிய உத்தியோகஸ்தர்.

(2) இவருடைய இடுப்பில் ஒரு தோல் பெல்ட்டும், சட்டைப் பையில் ஒரு நோட்டுப் புத்தகமும் ஓர் ஊது குழலும் இருக்கின்றன.

3. வேறு சொல் கூறு :—எண், கடமை, ஆபத்து, முதியோர்.

4.

குறுந்தடி	நிற்கிறார்
போலீஸ்காரர்	அடக்குவார்கள்
கலகத்தை	விசாரிப்பார்கள்
புலன்	தொங்குகிறது

பொருத்தமானவற்றைச் சேர்த்து எழுது.

28. தபால்காரர்

நிற்பவர்—தோல் பை — முத்திரைக்கடிதம் — விலாசம் — யார் யார்—எதை எதை—அவர் அவர்களுக்கு—அதை அதை—தபால் பெட்டி—வேறு வேருக—தனித்தனி—அரக்கு முத்திரை.

இந்தப் படத்தைப் பார்: இதில் நிற்பவர் தபால்காரர். இவர் கழுத்தில் ஒரு தோல் பையைத் தொங்கவிட்டுக்கொண்டு இருக்கிறார்; இடுப்பில் ஒரு தோல் பெல்ட்டும் கட்டிக்கொண்டு இருக்கிறார். அதில் தபால் இலாக்கா என்று எழுதப்பட்ட பித்தளைத் தகடு இருக்கிறது, பார்.



இவர் கையில் என்ன வைத்துக் கொண்டு இருக்கிறார்? இவர், ஒரு கையில் கடிதங்களை அடுக்கி வைத்துக் கொண்டு இருக்கிறார்; மற்றொரு கையால் ஒரு முத்திரைக் கடிதத்தை நீட்டுகிறார். இவர் வெளி ஊர்களிலிருந்து வந்த தபால் கடிதங்களை விலாசம் பார்த்து, அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார். இவர் கிராமங்களுக்குச் செல்லும்போது

கார்டு, உறை (கவர்), தலை (ஸ்டாம்பு) முதலியவற்றை எடுத்துக் கொண்டு போவார்; அங்கு யார் யார் எதை எதைக் கேட்கிறார்களோ, அதை அதை அவர் அவர்களுக்குக் கொடுப்பார். அவற்றிற்கு விலை உண்டு. இப்பொழுது கார்டின் விலை முக்கால் அணா; உறையின் (கவரின்) விலை ஓர் அணா. தலைகளில் (ஸ்டாம்புகளில்) காலணா முதல் பல வகைப்பட்ட விலை மதிப்புள்ளவை இருக்கின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தபால் பெட்டி இருக்கும். கிராம ஜனங்கள், தாங்கள் எழுதும் கடிதங்களை அப்பெட்டியில் போடுவார்கள். தபால்காரர் கிராமத்திற்கு வந்தவுடன் அதைத் திறந்து, அதில் போடப்பட்டிருக்கும் கடிதங்களை எடுத்துக்கொண்டு போவார்; அவற்றைத் தபால் ஆபீசுக்குக் கொண்டுபோய், அவற்றுக்கு முத்திரை இடுவார்; முத்திரை இட்ட கடிதங்களை வேறு வேறாகப் பிரித்து, தனித் தனிப் பைகளில் போட்டுக் கட்டுவார்; அப்பைகள் மீது அரக்கு முத்திரைவைப்பார்.

பிறகு அவை சேரவேண்டும் இடங்களுக்கு அனுப்பப்படும்.

கேள்விகள்

1. தபால்காரர் பெல்ட்டில் இருக்கிற பித்தளைத் தகட்டில் என்ன எழுதப்பட்டு இருக்கிறது?

2. தபால்காரருடைய அலுவல்கள் யாவை?

3. தபால்காரருடைய உடுப்புக்கும் போலீஸ்காரருடைய உடுப்புக்கும் உள்ள வித்தியாசங்கள் யாவை?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை அமைக்க:

(1) கழுத்தில் ஒரு தோல் பையை ——— இருக்கிறார். (தொங்கவிட்டுக்

கொண்டு, கட்டிக்கொண்டு) (2) ஒரு கையில் கடிதங்களை ——— இருக்கிறார். (அடுக்கி வைத்துக்கொண்டு, எடுத்துக்கொண்டு.)

2. அடியில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைக்க:—விலாசம், முத்திரை, யார் யார், எதை எதை, அவரவர், அதையதை, பலவகை, அரக்கு முத்திரை.

3. தபால் பெட்டியைப் போல ஒரு படம் போடு.

4. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க: (1) இந்தப் படத்தைப் பார்: — ——— நிற்பவர் போலீஸ்காரர், (2) ——— கையில் குறுந்தடி வைத்திருக்கிறார். (3) ——— பித்தளைப் பூண் கட்டியிருக்கிறது.

தலையில் சிவப்புத் தொப்பி	இருக்கிறார்கள்
குறுந்தடி	வைக்கிறார்.
ஜனங்களுக்கு வழிகாட்டிகளாக	வைத்திருக்கிறார்
கடிதங்கள்	இருக்கிறது.
முத்திரை	இருக்கின்றன.

—தக்கவாறு சொற்களை இரண்டு இரண்டாக இணைக்க.

29. கடிதங்கள்

கடுமையான—தலைவலியாலும் — வருந்திக்கொண்டிருக்கிறேன் —படுக்கை—தாழ்மையுள்ள—இப்படிக்கு—அன்புள்ள—பட்டணம்— பூகோளப் பயிற்சிப் புத்தகம்—கட்டாயம்.

நாமக்கல்,
6—8—'39.

மூன்றும் வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா, நான் நேற்று மாலை முதல் கடுமையான தலைவலியாலும் காய்ச்சலாலும் வருந்திக்கொண்டு இருக்கிறேன். இப்பொழுது என்னால் படுக்கையை விட்டு எழ முடியவில்லை. ஆதலால் தயவு செய்து இரண்டு நாட்கள் விடுமுறை கொடுக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
தங்கள் தாழ்மையுள்ள மாணவன்,
முத்துசாமி.

மூன்றும் வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,
போர்டு எலிமென்டரி பாடசாலை,
நாமக்கல்.

ஈரோடு,
8—10—'39.

அன்புள்ள அப்பாவுக்கு,

வணக்கம். இன்று காலை தாங்கள் பட்டணம் போகும் பொழுது நான் தூங்கிக்கொண்டிருந்தேன். என் ஆசிரியர் அறுபது பக்கம் நோட்டுப் புத்தகம் ஒன்றும், பூகோளப் பயிற்சிப் புத்தகம் ஒன்றும் வாங்கி வரச் சொன்னார். அவற்றோடு எனக்குச் சட்டைத் துணியும் வேண்டும். தாங்கள் இங்கு மறுமுறை வரும் பொழுது இவற்றைக் கட்டாயம் வாங்கிவர வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
தங்கள் பிரியமுள்ள மகன்,
முத்துசாமி.

திருவாளர். சுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
நெ. 19, சர் இராமசாமி முதலியார் சத்திரம்,
பார்க் டவுன் போஸ்ட் ஆபீஸ்,
சென்னை.

பயிற்சி

1. வயிற்று வலி காரணமாக இரண்டு நாட்களுக்கு ரஜா கொடுக்கும்படி ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

2. உன் அக்காள் கலியாணத்திற்குப் போவதற்காக ஒரு வாரத்திற்கு ரஜா கொடுக்கும்படி ஆசிரியருக்குக் கடிதம் ஒன்று எழுது.

3. உன் நண்பன் ஒருவனுக்கு ஒரு கதைப் புத்தகத்தை இரவலாக அனுப்பும்படி ஒரு கடிதம் எழுது.

4. முச்சக்கர வண்டி ஒன்று வாங்கி வரும்படி சென்னைக்குச் சென்றிருக்கும் உன் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுது.

30. நூல் நூற்றல் (தக்ளி)

நூற்கப்படுகிறது—இராட்டினம்—தக்ளியால்—உலர்த்தவேண்டும்—பஞ்சு மணையில்—அரைக்கவேண்டும்—உருளைகள்—கைப்பிடி—அடை அடையாக—தூசு—மிருது—வாங்குவார்கள்—மழமழப்பான—பழமையான—கருவி—ஆதிகாலத்திலிருந்தே—அற்பம்—அலட்சியம்—மூங்கில் கோல்—மாக்கல்தட்டு—சொரசொரப்பு—கொக்கி—ஊக்கு—குறுக்களவு—பஞ்சுத்திரியை—ஏறவேண்டுமானல்—ஏருதபடி—காலதாமதம்—ஆவலம்—பாதுகாப்புள்ள—மண்டியிட்டுக்கொண்டு—இலகுவான—அவ்வளவு—அதிகமான—எதிர் எதிராக.

'ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன்' என்பது ஒரு பழமொழி. நமக்கு உணவைப் போலவே உடையும் அவசியமானது. நாம் பெரும்பாலும் பருத்தி நூல் ஆடையே உடுத்துகிறோம்.

பருத்தி எவ்வாறு நூலாக நூற்கப்படுகிறது என்பதை இங்குக் கவனிப்போம்: மக்கள், தக்ளி இராட்டினம் இவற்றைக் கொண்டும், மேல் நாட்டு யந்திரங்களைக் கொண்டும், பஞ்சை நூலாக நூற்கிறார்கள். அவற்றுள் இந்தப் பாடத்தில் தக்ளியால் நூற்கப்படும் முறையைக் காண்போம்.



செடியிலிருந்து எடுத்த பருத்தியை ஈரம் போக வெயிலில் உலர்த்த வேண்டும். நன்றாக உலர்ந்த பிறகு அதனைப் பஞ்சு மணையில் இட்டு அரைக்க வேண்டும். மணையின் நடுவில் இரண்டு கால்கள்

நிறுத்தி, அவற்றில் இரண்டு உருளைகள் கோக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றுள் ஓர் உருளையோடு சேர்த்து ஒரு கைப்பிடி அமைக்கப் பட்டு இருக்கிறது. அதனைப் பிடித்துச் சுற்றினால், உருளைகள் எதிர் எதிராகச் சுற்றும். அவ்விரண்டு உருளைகளுக்கும் நடுவில் பஞ்சைக் கொடுத்துவிட்டு, கைப்பிடியை பிடித்துச் சுற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் உருளைகளுக்கு நடுவில் அகப்பட்ட பருத்தியின் பஞ்சு மாத்திரம், அவற்றின் இடையே சென்று பின்புறத்தில் விழும்; கொட்டைகள் தனியாக முன் பக்கத்தில் விழுந்துவிடும். பிறகு பஞ்சை வேறாகவும் கொட்டைகளை வேறாகவும் சேர்த்து வைக்க வேண்டும்.

இவ்வாறு கொட்டை நீக்கப்பட்ட பஞ்சு அடை அடையாக அழுந்தியிருக்கும். அதனை வில்லால் அடித்து, தூசு போக்கி, மிருதுவாக்க வேண்டும். பிறகு மழமழப்பான குச்சியையோ, கம்பியையோ வைத்து உருட்டித் திரிக்க வேண்டும். திரிக்கப்பட்ட பஞ்சு உருளைகள் திரி அல்லது 'பட்டை' என்று சொல்லப்படும். நூற்பவர், அத்திரிகளைத் தக்ளியைக் கொண்டு நூலாக நூற்பார்கள்.

தக்ளி என்பது பிறருடைய உதவி இல்லாமல் நாமே சுலபமாகச் செய்துகொள்ளக் கூடிய ஒரு கருவி ஆகும். நாம் இதற்காகப் பொருள் செலவும் செய்ய வேண்டுவது இல்லை. ஒரு மூங்கிற் கோலும், சிறிய மாக்கல் தட்டு ஒன்றும் இருந்தால் ஒரு தக்ளியைச் செய்துவிடலாம். கோல் ஏழு அங்குலம் நீளமும், குடைக் கம்பி அளவு பருமனும் உள்ளதாக

இருக்கும். அது கோணலும் வழவழப்பும் இல்லாமல், நேராகவும், சொரசொரப்பாகவும் இருக்கும். மூங்கில் கோலுக்குப் பதிலாக இரும்புக் கம்பியையும் உபயோகப்படுத்தலாம். அது, தலையில் கொக்கி போன்ற பிளவு உள்ளதாகவோ அல்லது ஊக்குச் செருகப்பட்டோ இருக்கும்.

கோலின் அடியில் சுமார் ஓர் அங்குலம் குறுக்களவு உள்ள மாக்கல் தட்டு, கோக்கப்பட்டிருக்கும். மாக்கல் தட்டுக்குப் பதிலாக, இரும்பு அல்லது செம்பு வட்டத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். அது கோலின் அடிப்பாகத்தில் சுமார் அரை அங்குலத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

தக்ளியினுல் நூல் நூற்பவர்கள் பஞ்சுத் திரியை இடது கையின் ஆள்காட்டி விரலுக்கும் நடு விரலுக்கும் இடையில் வைத்துக்கொள்ள வேண்டும். தக்ளியின் நுனியில் சிறிது நூலைச் சுற்றி அதன் மற்ருெரு நுனியைப் பஞ்சுத் திரியோடு சேர்த்துவைத்துக் கொள்ள வேண்டும். தக்ளிக் கோலை அதன் மத்தியில் வலது கையால் பிடித்துக்கொண்டு, திரித்துச் சுற்ற வேண்டும். தக்ளிச் சுழலும் போது, அதன் பிடியைவிட்டு, வலக்கையால் நூலை இழுத்துக் கொடுக்க வேண்டும். நூலில் முறுக்கு அதிகம் ஏற வேண்டுமானுல் தக்ளித் தண்டை இரண்டொரு முறை அதிகமாகச் சுற்ற வேண்டும். அப்படிச் சுற்றும் பொழுது, முறுக்குப் பஞ்சுத் திரியில் ஏருதபடி நூலை இடக் கையில் கட்டை விரல், மோதிர விரல்களால் அழுத்தமாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். நூற்கும் பொழுது நூலைத் தக்ளியின் தலையில் உள்ள

பிளவு அல்லது ஊக்கில் மாட்டிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தக்ளித் தண்டும் சுழலாது ; நூலிலும் முறுக்கேருது.

அவ்வாறு நூற்கப்பட்டு முறுக்கேறிய நூலைத் தக்ளித் தண்டின் அடியில் தட்டிற்கு மேலாகவோ, தலையில் ஊக்கிற்குக் கீழாகவோ அழுத்தமாகச் சுற்றிக் கொள்ளவேண்டும். தக்ளியில் நூல் நிரம்பின பிறகு அவற்றில் சுற்றியுள்ள நூலை, ஆவலத்தில் சுற்றிப் பாதுகாப்புள்ள இடத்தில் வைக்கவேண்டும். தக்ளியில் நூற்கப் பழகுகிறவர்கள், மண்டியிட்டு உட்கார்ந்து நூற்பதே சிறந்த முறை. இவ்வாறு நூற்ருல் சுலபமாக அதிக நூல் நூற்கலாம்.

தக்ளியால் நூல் நூற்பது மிகவும் எளிதான காரியம் ஆகும். நாள் தோறும் விளையாட்டாக ஒரு மணி நேரம் தக்ளியால் நூல் நூற்று வருவீர்களாஞல் உங்கள் உடைக்கு வேண்டும் அளவு நூலை நூற்று விடலாம். ஆகையால் நீங்கள் ஒரு க்ஷண நேரத்தையும் வீணுக்காமல், இத்தகைய தொழில்களைச் செய்து நன்மை அடையுங்கள்.

கேள்விகள்

1. பருத்தியை எவ்வாறு பஞ்சு வேறு கொட்டை வேருகப் பிரிக்கலாம்?

2. தக்ளி செய்வதற்கு என்ன என்ன வேண்டும்?

3. தண்டின் நுனியில் ஊக்குச் செருகப்படுவது எதற்கு?

4. தக்ளியில் நூல் நூற்பவர்கள் எப்படி உட்கார்ந்து நூற்ருல், அதிக நூல் நூற்கலாம்?

5. தக்ளியில் நூல் நிரம்பிவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

6. ஆவலம், தட்டு, ஊக்கு—இவற்றை விளக்கு.

பயிற்சி

1\. அரசன் — வளையல்
பெட்டியில் — பாம்பு
வளையில் — பணம்
பொன் — கிரீடம்
} தக்க சொற்களை இணைத்துக் கூறுக.

2\. மிருதுவாக்க, பார்ப்பதற்கு, சுலபமாக—இவற்றைத் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

3\. பின்புறம் × முன்புறம், நீளம் × குட்டை, வரவு × செலவு, மிருது × கடினம்.—இவைபோன்ற எதிர்ச் சொற்களை எடுத்து எழுது.

4\. அரை. அறை; கொல்ல, கொள்ள.—வேறுபாடு கூறு.

5\. மழமழப்பு, சொரசொரப்பு, வழவழப்பு—இவை இரட்டைப் பட வந்துள்ளன. இவை **இரட்டைச் சொற்கள்** எனப்படும். இவை போன்ற இரட்டைச் சொற்கள் 4 கூறு.

6\. படத்தைப் பார்த்துத் தக்ளியைப் போல ஒரு படம்போடு.

7\. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—(1) இரண்டு உருளைகள் ———; (2) பஞ்சு உருளை களை ——— அல்லது ——— என்று சொல்வார்கள்; (3) தக்ளியில் நூல்நூற்பது மிகவும் ——— காரியம்; (4) தக்ளியின் ——— நூலாக நூற் பார்கள்.

8\. வாக்கியங்களில் அமைத்தெழுது:—அடைஅடையாக, இயந்தி ரங்கள், பழமையான, ஆதி காலத்திலிருந்தே, ஏற வேண்டுமானால், இலகுவான, அவ்வளவு அதிகமான.

9\. எதிர்ப் பதம் கூறுக:—பழமை, சுலபம், செலவு, அடி, குறை வும், முதலில், பருமன்.

10\. பொருள் கூறுக:—தூசு, மிருது, அற்பம், வலி, சிரமம்.

31. நம் நாடு

1. மன்னும் இமயமலை எங்கள் மலையே !
மாநில மீதது போற்பிறி திலையே !
இன்னறு நீர்க்கங்கை ஆறெங்கள் யாறே!
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே.

2. மாரத வீரர் மலிந்தநன் னாடு ;
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு ;
நாரத கான நலந்திகழ் நாடு ;
நல்லன யாவையும் நாடுறு நாடு ;
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு ;
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு ;
பாரத நாடு பழம்பெரு நாடு
பாடுவம் இஃதை ; எமக்கிலை யீடே.

—பாரதியார்

32. பாரதியார்

தமிழ்க் கவிஞர் — அறியாதவர்களே — இருக்கமாட்டார்கள்— முழுப்பெயர்—சரித்திரத்தை—அவசியம்—வருஷங்களுக்கு — தந்தை யார்—செல்வமாக-பாஷைகளையும்—தனியாக—கவிகள்—அர்த்தம்- சாமர்த்தியத்தை—ஆச்சரியப்பட்டார்கள்—கஷ்டப்பட்டார்—வெளிக் கிளம்பினர்—சிலகாலம்—மனைவி மக்களோடு — இலட்சியமே —எலும் பும் தோலுமாக—விடுதலை—பழையபடியே—உழைக்கவும்-மரியாதை

பிள்ளைகளே, நீங்கள் பாரதியார் பாட்டுகளைப் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அந்தப் பாரதியார்

என்பவர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? பாரதியார் ஒரு பெரிய தமிழ்க் கவிஞர். நம் தமிழ் நாட்டில் பாரதியாரைப் பற்றி அறியாதவர்களே இல்லை. ஆனால் இவருடைய முழுப்பெயர் பலருக்குத் தெரியாது. சுப்பிரமணிய பாரதியார் என்பதே இவருடைய முழுப் பெயர். மக்கள் இவரை மஹாகவி, வீரகவி, தேசீய கவி என்றெல்லாம் புகழ்வார்கள். பெரிய நகரங்கள் முதல் சிறிய கிராமங்கள் வரை

யில் எல்லா இடங்களிலும் பாரதி தினம் கொண்டாடப்படுவது உங்களுக்குத்தெரியும். அப்படிப்பட்ட பெரியவருடைய சரித்திரத்தை நீங்கள் அறிய வேண்டுவது அவசியம்அல்லவா?

பாரதியார் எட்டையபுரம் என்னும் ஊரில் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் பிறந்தார். இவருடைய தந்தையார் சின்னசாமி ஐயர் என்பவர்; தாயார் லக்ஷ்மி அம்மாள். இவருடைய ஐந்தாவது வயதிலேயே தாயார் இறந்துவிட்டார். தந்தையார் இவரைச் செல்வமாக வளர்த்துப் படிக்க வைத்தார். இவர் தமிழ், இங்கிலீஷ் ஆகிய இரண்டு பாஷைகளையும் படிக்கலானார். இவர் இங்கிலீஷ் பாஷையை விடத் தமிழ் பாஷையையே அதிக ஆசையோடு

படித்தார். இவர் சிறுவயதில் யாரோடும் அதிகமாகப் பேசமாட்டார். பக்கத்துப் பிள்ளைகளோடு சேரமாட்டார். எப்பொழுதும் தனிமையாகவே இருப்பார்; ஒருவரும் கண்ணில் படாத இடத்தில் தனியாக உட்கார்ந்து படித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருப்பார். இவர் ஏழு எட்டு வயதிலேயே தமிழில் கவிகள் பாடத் தொடங்கினர்; அயலார் கவிகளுக்குச் சுலபமாக அர்த்தம் சொல்லியும் வந்தார். இவருடைய சாமர்த்தியத்தைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

பாரதியாருக்குப் பதினைந்தாம் வயதில் திருமணம் நடந்தது. உடனே அவர் தந்தையாரும் இறந்தார். தந்தையார்இவருக்குச் சிறிதும் சொத்து சேர்த்து வைக்க வில்லை. இவரை ஆதரிப்பவர்களும் யாரும் இல்லை. அதனல் இவர் மிகவும் கஷ்டப்பட்டார்; சில வருஷங்கள் காசி நகரில் தம் அத்தையார் வீட்டில் இருந்து வந்தார்; பிறகு எட்டையபுரத்திற்கே திரும்பிவந்தார். அவ்வூர் அரசருக்கு இவருடைய பெருமை தெரிந்தது. அவர் இவருக்குப் பணம் கொடுத்து ஆதரித்தார். பாரதியார் பல பாட்டுகளைப் பாடி அரசருக்குச் சந்தோஷம் உண்டாக்கி வந்தார். சில வருஷங்கள் சென்றன. பாரதியாருக்கு அரசரிடம் பழக இஷ்டம் இல்லை. அதனல் இவர் எட்டையபுரத்தைவிட்டு வெளிக் கிளம்பினர்.

பிறகு, இவர் மதுரையில் சிலகாலம் இருந்தார்; அங்கிருந்து சென்னப்பட்டினத்திற்கு வந்தார்; அங்கு ஒரு சிறிய உத்தியோகத்தில் அமர்ந்தார்;

உத்தியோகத்தோடு தேசத்திற்காகவும் உழைத்து வந்தார். இவர் சென்னபட்டினத்தை விட்டு, புதுச்சேரிக்குப் போனுர்; அங்குப் பத்து வருஷங்கள் இருந்தார். இவர் புதுச்சேரியில் பட்ட கஷ்டங்களுக்கு அளவே இல்லை; உண்ண உணவு இல்லாமல் மனைவி மக்களோடு வருந்தினுர்; உடுத்துக்கொள்ள உடை இல்லாமல் தவித்தார். ஆனுல் இவர், இந்தக் கஷ்டங்களை இலட்சியம் செய்யவே இல்லை. இவர் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருப்பார்; அந்தக் கஷ்ட காலத்தில்தான் அதிகமான பாட்டுகளைப் பாடினுர். உணவு இல்லாத கஷ்டத்தால், இவருடைய உடம்பு உலர்ந்து போய்விட்டது. இவர், பாவம்! எலும்பும் தோலுமாக இளைத்துப்போய்விட்டார்.

இவர் புதுச்சேரியிலிருந்து மறுபடியும் சென்னைக்குத் திரும்பினுர். பழையபடியே ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தார்; சென்னைக்கு வந்த பிறகும் இவருடைய கஷ்டங்கள் நீங்கவில்லை. எனினும், இவர் அப்பொழுதுதான் பல பாட்டுகளையும் கதைகளையும் எழுதினுர்; தேசத்திற்காக உழைக்கவும் ஆரம்பித்தார். ஆனுல் நாளுக்கு நாள் இவருடைய தேகபலம் குன்றிக்கொண்டே வந்தது. கடைசியில் இவர், முப்பத்தொன்பதாம் வயதில், திருவல்லிக்கேணியில் காலமானுர்.

இவர் இறந்துவிட்டாலும் இவருடைய பாட்டுகளும் கதைகளும் இன்றும் இருக்கின்றன. நாம் அவற்றையே பாரதியாராக எண்ண வேண்டும்; அவற்றைப் படித்துப் பாடம் செய்ய வேண்டும். பார

தியாருடைய பாட்டுத் தெரியாத பிள்ளைகளே தமிழ் நாட்டில் இருத்தல் ஆகாது. அவற்றைப் பாடி, அவருக்கு மரியாதை செய்ய வேண்டும்.

வாழ்கநம் பாரதி! வாழ்கநம் பாரதி!
வாழ்க அவன்பெயர்! வாழ்க அவன்புகழ்!
வாழ்க அவன்செய்த வண்தமிழ்ப் பாடல்கள்!
வீழ்க துயர்இன்றே வீரமோங் குகவே!

கேள்விகள்

1. பாரதியார் என்பவர் யார்? அவர் முழுப் பெயர் என்ன?
2. சிறு வயதில் அவர் எப்படி நடந்துவந்தார்?
3. பாரதியாரை ஆதரித்த அரசர் யார்?
4. பாரதியார் எட்டையபுரத்தை விட்டு ஏன் வெளிக்கிளம்பினர்?
5. பாரதியார் எங்கெங்கு வசித்தார்?
6. இவருக்கு நாம் எப்படி மரியாதை செய்ய வேண்டும்?

பயிற்சி

1. உன் பாடபுத்தகத்தில் உள்ள பாரதியார் பாடல்களின் அடிகளை எழுதுக.

2. கீழ்க் கோடிட்டுள்ள இடங்களில், அவற்றின் எதிரில் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் பொருத்தமானவற்றை அமைக்க:—

(1) பாரதியாருடைய முழுப் பெயர் பலருக்கும் ——— (தெரியும், தெரியாது).

(2) பாரதியாருக்கு அரசனிடம் பழக இஷ்டம் ——— (இருந்தது, இல்லை.)

(3) பாரதியார் எப்பொழுதும்——— இருப்பார். (துக்கமாகவே, சந்தோஷமாகவே).

(4) பாரதியார் பாட்டுத்——— பிள்ளைகளே இருத்தல் ஆகாது. (தெரிந்த, தெரியாத)

3. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—பழையபடியே, மரியாதை, எலும்பும் தோலுமாக.

4. வேறு மொழி கூறுக:—பாஷை, அர்த்தம், சொத்து, இஷ்டம், கஷ்டம், இறந்தார்.

5. எதிர்ப் பதம் கூறுக;—ஆசை, அயல், பெருமை, விரோதம்.

33. நாடகம்

புத்திமானே பலவான்

கஜராஜன்—தூதனுக—கிழத்தனம்—அடக்கிஆள—இராஜபதவி—தீர்மானித்தோம்—வேண்டுகோளே—தாமதித்தால்—முகூர்த்தவேளே—தவறிப்போகும் — ஆனந்தத்தால் — மெய்மறந்து — கூச்சலிட்டுக் கொண்டே.

[மத்தகஜன் என்னும் யானே தன் இன விலங்குகளேயே கொடுமைப் படுத்திவந்தது. அதனுல் எல்லா யானேகளும் அதைக் கொன்றுவிட முடிவு செய்தன. அக்காரியத்தை நிறைவேற்ற **ஜம்புகன்** என்னும் ஒரு நரியை அனுப்பின.]

காட்சி 1

இடம்	காடு
காலம்	மாலே
பாத்திரங்கள்	மத்தகஜனும், ஜம்புகனும்

[மத்தகஜன் என்னும் யானே கம்பீரமாகத் துதிக்கையை ஒரு தந்தத்தின் மேல் தொங்கவிட்டுக்கொண்டு நிற்கிறது. ஜம்புகன் என்னும் நரி அடக்க ஒடுக்கத்தோடு வந்து வணங்கி நிற்கிறது.]

மத்தகஜன் :— நீ யார் ? இங்கு வந்ததன் காரணம் என்ன ? விரைவில் சொல்.

ஜம்புகன் :— கஜராஜனே, உம்மை வணங்குகிறேன். எனக்கு அருள் செய்ய வேண்டும். நான் ஓர் அற்ப நரி. இக் காட்டில் வசிக்கும் மிருகங்களெல்லாம் என்னே உம்மிடம் அனுப்பின. நான் அவற்றின் தூதனுக வந்திருக்கிறேன்.

மத்தகஜன் :— என்ன செய்தி ? விரைவில் சொல்.

ஜம்புகன் :— நெடுங்கழுத்தன் கிழத்தனம் அடைந்து விட்டது. அதனுல் மிருகங்களே அடக்கி ஆள முடியவில்லே. ஆகவே மிருகங்கள் எல்லாம் ஒன்று கூடி யோசித்தன. நெடுங்கழுத்தனே இராஜ

பதவியிலிருந்து விலக்கி விட்டன. அரசன் இல்லாமையால் நாடே அழகு இழந்துவிட்டது. அரசன் இல்லாத இராஜ்யம் அழிந்துவிடும் அன்ருே? அதனுல் நாங்கள் ஒன்று கூடி ஆலோசித்தோம். உங்களிடத்தில் எல்லா விதமான இராஜ குணங்களும் அமைந்திருக்கின்றன. ஆகையால் உங்களையே அரசனுக்கத் தீர்மானித்தோம். நான் அதற்காகத் தங்களை அழைத்துப் போகவே வந்தேன். தயை செய்து எங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மத்தகஜன் :—(ஆச்சரியத்தோடு) ஆ! அப்படியா! நெடுங்கழுத்தனை ஒழித்தீர்களா? எல்லோரும் என்னை விரும்புகின்றீர்களா? அப்படியானுல் சரி ; நாம் போகலாம் வா.

ஜம்புகன் :—மஹா ராஜா, வாருங்கள். நாம் இப்பொழுதே போக வேண்டும். தாமதித்தால் முகூர்த்த வேளை தவறிப் போகும் ; புறப்படுங்கள்.

மத்தகஜன் :—சரி, புறப்படு. நீ முன்னே செல். நான் உன்னைப் பின் தொடர்ந்து வருவேன்.

[நரி முன்னே சென்றது. யானை அதன் பிறகே சென்றது. நரி அதை ஒரு பாழுங் கிணற்றின் வழியாக அழைத்துப் போயிற்று. அரசனுகப் போகிருேம் என்னும் ஆனந்தத்தால் யானை மெய்மறந்து சென்றது. அதனுல் அது வழியைக் கவனிக்கவில்லை ; கால் வழுக்கி அந்தப் பாழுங் கிணற்றில் விழுந்துவிட்டது. ஜம்புகன் 'ஜயித்தேன்' என்று கூச்சலிட்டுக்கொண்டே ஓடிவிட்டது.]

கேள்விகள்

1. ஜம்புகன் யார்?
2. ஜம்புகன் மத்தகஜனை எப்படிக் கொன்றது?
3. நீ இக்கதையிலிருந்து என்ன அறிகிருய்?

பயிற்சி

1. நீ, இப்புத்தகத்திலுள்ள மற்றச் சம்பாஷணைகளையும் இம்மாதிரி நாடகமாக்கி நடித்துப் பழகு.

2. 'முயலும் சிங்கமும்' என்னும் கதையை இம்மாதிரி நாடகமாக்கி நடித்துப் பழகு.

3. இக் காட்சியைக் கதை நடையில் எழுது.

4. இக் கதை முழுவதையும், இதிலுள்ள சொற்களையும் அமைத்துப் பத்து வரியில் சுருக்கி எழுது.

5. நீ, இந்த நாடகத்தில் எந்தப் பாத்திரமாக நடிக்க விரும்புகிறாய்? ஏன்?

34. இராட்டினப் பாட்டு

ஆடு ராட்டே! சுழன்று ஆடுராட்டே!
ஆயாசம் தீர்ந்ததென்று ஆடுராட்டே!
ஏழ்மை ஒழிந்ததென்று ஆடுராட்டே!
இன்பம் மிகுந்ததென்று ஆடுராட்டே!
தாழ்மை தொலைந்ததென்று ஆடுராட்டே!
தர்மம் சிறந்ததென்று ஆடுராட்டே!
சோம்பல் ஒழிந்ததென்று ஆடுராட்டே!
சோறு நிறைந்ததென்று ஆடுராட்டே!
வீம்பு மறைந்ததென்று ஆடுராட்டே!
வித்தை விளைந்ததென்று ஆடுராட்டே!
மானம் நிலைத்ததென்று ஆடுராட்டே!
வாழ்ந்தனர் சோதரரென் றாடு ராட்டே!
ஈனம்தொழில் என்னுமெண்ணம் ஒழிந்ததென்றே
இன்பமுடன் சுற்றிச்சுழன் றாடுராட்டே!

—**வித்வான் ம. வி. இராகவன்**

35. செய்யுள் பகுதி

I. கடவுள்

1. தெய்வம் இகழேல்.

(ஆத்திசூடி)

2. தெய்வம் சீறில் கைதவம் மாளும்.

(கொன்றைவேந்தன்)

3. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

(உலகநீதி)

II. கோவில்

4. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

(கொன்றைவேந்தன்)

5. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

(உலகநீதி)

III. குரு

6. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.

(வெற்றிவேற்கை)

IV. தாய் தந்தையர்

7. தந்தை தாய்ப் பேண்.

(ஆத்திசூடி)

8. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
9. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
10. தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.

(கொன்றைவேந்தன்)

11. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.

(வெற்றிவேற்கை)

12. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

(உலகநீதி)

V. கல்வி

13. இளமையில் கல்.
14. நூல் பல கல்.
15. ஓதுவது ஒழியேல்.

(ஆத்திசூடி)

16. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
17. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
18. ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்.

(கொன்றைவேந்தன்)

19. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
20. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.
21. எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியில் கற்றோரை வருக என்பர்.

(வெற்றிவேற்கை)

22. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.

(உலகநீதி)

VI. சேரக் கூடாதவர்

23. மூர்க்கரோடு இணங்கேல்.

(ஆத்திசூடி)

24. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.

(கொன்றைவேந்தன்)

25. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

(வெற்றிவேற்கை)

26. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
27. கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டாம்.
28. முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
29. புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்.
30. தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்.

(உலகநீதி)

VII. பெரியோர் நட்பு

31. பெரியாரைத் துணைக்கொள்.

(ஆத்திசூடி)

32. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

(வெற்றிவேற்கை)

VIII. ஊக்கம்

33. ஊக்கமது கைவிடேல்.

(ஆத்திசூடி)

34. ஊக்க முடைமை ஆக்கத்திற்கு அழகு.
35. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.

(கொன்றைவேந்தன்)

IX. மேன்மக்கள் சொல்

36. மேன்மக்கள் சொல் கேள்.

(ஆத்திசூடி)

37. மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்.

(கொன்றைவேந்தன்)

38. மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.

(உலகநீதி)

X. உழவு

39. பூமி திருத்தி உண்.

(ஆத்திசூடி)

40. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
41. மேழிச் செல்வம் கோழை படாது.
42. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.

(கொன்றைவேந்தன்)

43. உழவர்க்கு அழகு உழுதூண் விரும்பல்.

(வெற்றிவேற்கை)

XI. பொருள்

44. பொருள்தனைப் போற்றி வாழ்.

(ஆத்திசூடி)

45. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
46. தேடா தழிக்கிற் பாடாய் முடியும்.
47. வளவன் ஆயினும் அளவறிந் தளித்துண்.

(கொன்றைவேந்தன்)

XII. காலம்

48. பருவத்தே பயிர் செய்.

(ஆத்திசூடி)

49. பாலோ டாயினும் காலம் அறிந்துண்.

(கொன்றைவேந்தன்)

XIII. கோபம்

50. ஆறுவது சினம்.

(ஆத்திசூடி)

51. தீராக் கோபம் போராய் முடியும்.

(கொன்றைவேந்தன்)

I. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஐயம் இட்டுண்.
3. ஞயம்பட உரை.
4. நன்றி மறவேல்.
5. குணமது கைவிடேல்.
6. சோம்பித் திரியேல்.
7. தேசத்தோ டொத்துவாழ்.
8. மீதூண் விரும்பேல்.
9. ஊருடன் கூடிவாழ்.
10. வைகறைத் துயிலெழு.

II. கொன்றைவேந்தன்

1. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
2. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
3. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
4. நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
5. நோன்பென் பதுவே கொன்றுதின் ணாமை.
6. பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்.
7. போனகம் என்பது தானுழந்து உண்டல்.
8. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
9. உரவோர் என்கை இரவா திருத்தல்.
10. ஒத்த இடத்து நித்திரை கொள்.

III. வெற்றி வேற்கை

(1) அழகு

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை.
4. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
5. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

(2) இல்லை

1. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
2. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
3. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
4. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

(3) அல்லர்

1. பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
2. சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
3. பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்.
4. உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்.

(4) நன்றே

1. கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
   கடும்புலி வாழும் காடு நன்றே.
2. சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
   தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

IV. உலகநீதி

வேண்டாம்

1. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
2. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
3. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
4. செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.
5. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.
6. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

தமிழில் வழங்கும் வடமொழி எழுத்துக்கள்

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
ஜ்	ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ
ஸ்	ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ
ஷ்	ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ
ஹ்	ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ
க்ஷ்	க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ	க்ஷெ	க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ